நியூ கேம்பிறிட்ஜ்
டியூடோறியல்இன்ஸ்ரிரியூட்
திருநெல்வேலி சந்தி
10.1-80 முதல்
1: Radio & Electronic with Practical
2. Advanced & Spoken English
3. சுருக்கெழுத்து தட்டச்சு (ஆங்கிலம்)
4. I. B. K., I. A. A.
விபரங்கட்கு:
V. M. பாக்கியநாதன்

பக்கங்கள் 8

# ஈழநாடு
## The EELANAADU

50 சதம்

மலர் 21 மார்கழி 23 ஸபர் 18 இதழ் 329
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 7-1-80

புதிய வகுப்புகள்
G. C. E. A/L O/L
1980/81 ஆகஸ்ட், டிசம்பர்
ஆரம்பம் 18-1-80
லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

UNIVERSITY OF SRI LANKA ... RECEIVED 1980-7-7 PERIODICALS DIVISION

★ இந்தியத் தேர்தல் முதல்கட்ட வாக்களிப்பு நிலபரம் :

# இந்திராவின் பக்கம் இந்தியா!



## தமிழ்நாட்டில் கருணாநிதி

(புதுடில்லி)

**சுதந்திர பாரதத்தின் ஏழாவது பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற இடைக்காலத் தேர்தலின் முதல்கட்ட வாக்களிப்பு முடிவுகள் திருமதி இந்திராகாந்திக்கு மிகவும் சாதகமாக அமைந்துள்ளது!**

இன்று அதிகாலை ஒருமணிவரை கிடைக்கப்பெற்ற தேர்தல்முடிவுகளின் படி, கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற 226 தொகுதிகளுக்கான தேர்தலில், சுமார் நூறு தொகுதிகளில், இந்திராகாங்கிரஸ் அபேட்சகர்கள் பெரும்பான்மைபலத்துடன் முன்னணியில் திகழ்வதாகத் தெரியவருகிறது.



இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு முதல் கட்ட வாக்களிப்பில் கூடுதலான வெற்றி வாய்ப்பு கிடைத்திருக்கும் அதே நேரத்தில்; இவரது நேரடி எதிர்ப்பாளர்களான ஜனதாகட்சியோ அல்லது மக்கள் கட்சி எனப்படும் காபந்து பிரதமர் சரண்சிங்கின் 'லோக்தள்' கட்சியோ(நேற்று நள்ளிரவு வரை வெளியான முடிவுகளின்படி) ஒரு தொகுதியிலும் வெற்றிபெறவில்லை.

உத்தியோகபூர்வமாகநேற்று அறிவிக்கப்பட்ட சில முடிவுகளின்படி, திருமதி இந்திரா காந்தியின் கட்சி பல இடங்களில் அமோகமான ஆதரவுடன் வெற்றிபெற்றுள்ளது,

கர்னாடக மாநிலத்தில், ஒரு தொகுதியில் ஜனதா வேட்பாளரைவிட இந்திராகாங்கிரஸ் அபேட்சகர் ஒருலட்சம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளார். இதே மாதிரி, ஒரிஸா மாநிலத்தின் ஒரு தொகுதியில் ஜனதா வேட்பாளரைவிட இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் ஒரு லட்சம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டினர்.

தேர்தலின் முதல்கட்டமாக தமிழ்நாட்டில் மொத்தம் 19 தொகுதிகளுக்கு நடைபெற்ற வாக்களிப்பில் தி. மு,

(8-ம் பக்கம் பார்க்க)

(புதுடில்லி)

இச் செய்தி அச்சுக்குப்போகும்வரை கிடைக்கப்பெற்ற இந்திய பாராளுமன்ற இடைக்காலத்தேர்தல் முடிவுகள் வருமாறு:

| | |
|---|---|
| **வெளியான முடிவுகள்:** | **50** |
| இந்திராகாங்கிரஸ் | 36 |
| வலதுகம்யூனிஸ்ட் | 02 |
| இடது கம்யூனிஸ்ட் | 02 |
| அர்ஸ் காங்கிரஸ் | 02 |
| தி. மு. க. | 01 |
| ஜனதா | 02 |
| லோக்தள் (மக்கள் கட்சி) | 00 |
| ஏனையவை | 05 |

தொகுதிகளிலும் தி. மு. க, 06 தொகுதிகளிலும் முஸ்லிம் லீக் 01 தொகுதியிலும் முன்னணியில் நிற்பதாக அறிவிக்கப்பட்டது.

வேலூரில் ஜனதாவை விட முஸ்லிம் லீக் உறுப்பினர் 36,000 அதிகப்படியான வாக்குகளினூலும், ஸ்ரீபெரும்புதூரில் தி. மு. க, அபேட்சகர் 10,000 அதிகப்படியான வாக்குகளினூலும் திருப்பத்தூரில் தி. மு. க. அபேட்சகர் 27,000 அதிகப்படியான வாக்குகளிலும், அரக்கோணத்தில் இந்திராகாங்கிரஸ் 60,000 அதிகப்படியானவாக்குகளினூலும் முன்னணியில் நிற்பதாக அறிவிக்கப்பட்டது.

● 19 தொகுதிகளுக்கு கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற முதல்கட்ட வாக்களிப்பில் தமிழகத்தில்அ. தி. மு. கழக வேட்பாளர் எவருமே வெற்றி வாய்ப்புபெறவில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இத் தொகுதிகளில் பதினெட்டில் தி. மு. க. – இந்திரா காங்கிரஸ்– முஸ்லிம்லீக் கூட்டு முன்னணி முதன்மையாகத் திகழ்கிறது.

## புதுச்சேரி நிலைமை

### கடைசிச் செய்தி

பாண்டிச்சேரியில் இந்திரா காந்தி - தி. மு. க. - முஸ்லீம் லீக் கூட்டணி அறுதிப்பெரும்பான்மை பெற்றுவிட்டதாக இன்று காலை ஒரு மணிக்கு வெளியான தேர்தல்அறிக்கை தெரிவித்தது, இக்கூட்டுமுன்னணி 20 தொகுதிகளில் வெற்றிவாய்ப்பு பெற்றுள்ளது.

தமிழ் நாட்டில் நடைபெற்ற முதல் கட்ட வாக்களிப்பில் இன்று காலை ஒரு மணிக்கு கிடைப்பெற்ற முடிவுகளின்படி மொத்த 18 தொகுதிகளில் இந்திராகாங்கிரஸ் 11

விசேட அறிவித்தல்

CIC

கல்கிசன்ஸ் நிறுவனம்
பென்றிலேற்-எமல்சன்
டியலக்ஸ்-எனமல்
டியூகோ பெயின்ற் வகைகளுக்கு
மட்டுமே விற்பனையாளராக
நியமிக்கப்பட்டுள்ளது.

கல்கிசன்ஸ்
147, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7711

உங்கள் தேவைகள் எதுவாயினும் அத்தனையும் நியாய விலையில் கிடைக்கிறது எம்மிடம்!

விவசாயிகளின் தேவைகளுக்கு:
ஃ நீரிறைக்கும் இயந்திரம், ஃ இரண்டு சில்லுஉழவு இயந்திரங்கள், ஃ தெளிகருவிகள், ஃ உப உறுப்புக்கள், ஃ அல்கத்தின் குழாய்கள், ஃ கிருமிநாசினிகள் மற்றும் விவசாய உபகரணங்கள்.

உப உணவுப்பொருட்கள்:
ஃ பூடு, ஃ பயறு, ஃ மிளகு, ஃ கிலிம் (KLIM) பாலுணவு, ஃ நெஸ்டம் (NESTUM), ஒவல்ரின் (OVALTINE)
பாவனைப்பொருட்கள்: "கோல்மன்" பெற்றோமாக்ஸ்
கால்நடைகளுக்கு: ஃ உணவுத் தீன்வகைகள், ஃ சகல மருந்துவகைகள்.

விரைவில் கிடைக்கவிருக்கிறது "ரெக்சினட்" தைவான் பைசிக்கிள்கள். விலை ரூபா 750/- மட்டுமே. கரியர்,ஸ்ராண்ட்,பெல், முன்லைட் இனும்.
கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகைகள் உண்டு,

வர்த்தக விசாரணைகள்:

ஸ்ரீ லங்கா கூட்டுறவு சந்தைப்படுத்தும் சம்மேளனம். (ம. ப.)
Sri Lanka Co-op. Marketing Federation Ltd.

தலைமைக் காரியாலயம்:
"கூட்டுறவுச் சதுக்கம்", 127, கிராண்பாஸ் வீதி, கொழும்பு 14.

கிளை:
111, பிரதான வீதி,யாழ்ப்பாணம். தொலைபேசி: 504

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய உற்பத்தியின் செலவீனம் அதிகரித்தது

(முன்னைய தொடர்ச்சி)

செலவினத்தைப் பொறுத்தவரை, உதவு தொகைகளைக் குறைத்து முதலீட்டுச்செலவை அதிகரிப்பதன் வாயிலாக செலவுகளை நுகர்விலிருந்து முதலீடுகள் நோக்கி மாற்றுவதற்கு முதன்மையான முறையில் முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஏறக்குறைய அரைப்பங்கான குடித்தொகையினரிடமிருந்து உணவிற்கான உதவு தொகை மீளப்பெறப்பட்டது- எனினும் மீண்டெழும் செலவினத்தின் தனியொரு முதன்மைக் காரணியாக உணவு உதவுதொகை தொடர்ந்தும் விளங்கி வருகின்றது. இந்நிலைமை நெல்லின் உத்தரவாதவிலையில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, மா ஆகியவற்றின் ரூபாப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும் உருவாயிற்று. உயர்ந்த வீதத்தில் மீண்டெழும் செலவினத்தில் அதிகரிப்பு இருந்தபோதிலும் உயர்ந்த வீதத்தில் மூலதனச் செலவின் விரிவு அமைந்து மூலவளங்களை மீண்டெழும் செலவினத்திலிருந்து மூலதனச் செலவுநோக்கி மாறியதை எடுத்துக்காட்டுகிறது. எவ்வாறாயினும் முற்பணக்கணக்குகளின் கீழ் வெளிக்கொடுப்பனவுகள் என்றுமில்லாதவகையில் அமைந்திருந்ததின் காரணமாக ஏற்கனவே வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கும் காலத்தில் எதிர்பார்த்தவாறு நடைமுறைக்கணக்கு மிகையை அடையக்கூடியதாக இருக்கவில்லை இதுவிரைவாக விரிவடைந்து செல்லும் செலுத்துமதிகளின் அளவினை உள்ளடக்கும் வகையில் சாதாரணவரவு செலவுத்திட்டப் பொறிமுறையால் ஈடுகொடுக்க முடியாத தன்மையைக் காட்டுகிறது.

(பக்கம் 177)

மொத்தத் தேசிய உற்பத்தியின் சதவீத அடிப்படையில் அரச செலவினத்தின் பங்கு 1977இன் 30 சதவீதத்திலிருந்து 1978இல் 49சதவீதமாக அதிகரித்தது. இவ்வதிகரிப்பு பொருளாதாரத் தொழிற்பாடுகளில் அரசின்அதிகரித்த செயற்பாட்டினைக் காட்டுகிறது. எனினும் தனியார்துறையின் பொருளாதார நடவடிக்கைகள் கூடிய பின்னர் தனியார்துறையின் நுகர்வும், முதலீடும் எதிர்காலத்தில் அதிகரிக்க வேண்டும். அத்துடன் மொத்தத் தேசிய உற்பத்தியின் சதவீதமாக அரச மூலதனச்செலவினத்தின் பங்கு அதிகரித்த வேளையில் மொத்த மூலதன ஆக்கத்தின் சதவீதமாக அரசின் மூலதன ஆக்கத்தின் பங்கும் 1977இன் 31 சதவீதத்திலிருந்து 1978இல் 37சதவீதமாக அதிரித்தது.

**1978ம் வருடத்திய மத்தியவங்கியின் பொருளாதார மீளாய்வு**

எவ்வாறுயினும்தனியார் துறையின் மூலதன ஆக்கம் (அரச கூட்டுத்தாபனங்கள்நீங்கலாக) 41சதவீதம் கொண்ட பெரும் பங்கினைத் தொடர்ந்தும் வகித்து வருகின்றபோதிலும் இது 1977இன் பதிவு செய்யப்பட்ட 52 சதவீதத்திலிருந்து வீழ்ச்சியுற்றமையை காட்டியபோதும் அதன்பங்கு தொடர்ந்தும் கூடியதாக 41 சதவீதத்தில் காணப்பட்டது.

(பக்கம் 177-178)

கோட்பாட்டடிப்படையில் மறைமுகவரியில் கூடியளவில் தங்கியிருக்கும் தன்மை வரியமைப்பில் அதிகரித்த பின்னடைவுக்கு, வழிவகுக்குமெனினும் மறைமுகவரியில் ஏற்படும் உள்ளார்ந்த பின்னடைவை நீக்குவதற்கு நடைமுறையில் வெவ்வேறுன வருமானப் பிரிவினர் பெரிதும் பயன்படுத்தப்படும் பொருட்கள்மீது வேறுபட்ட வரிவீதங்களை கொண்ட மறைமுகஅரித் தொடர்களை பயன்படுத்தலாம். அரசின் கொள்கையும் பின்னர் கூறப்பட்ட கருத்தையொட்டி உள்ளதுபோல் தோற்றுகிறது.

(ப்க்கம் 178)

எவ்வாறுயினும் வெளிநாட்டு வர்த்தக வரிகளில் கூடியளவிற்குத் தங்கியிருக்கும் தன்மை வரியிலிருந்து பெறப்படும் அரசிறை மட்டத்தின் உறுதியின்மையை அதிகரிக்கச் செய்யும். இது இரண்டு காரணங்களால் ஏற்பட முடியும். முதலாவது ஏற்றுமதிகளிலிருந்ததான வரிவருவாய் பெருமளவு அக்கைத்தொழில்களின் விலைகளின் மட்டத்திலும் இலாபத்தன்மையிலும் தங்கியுள்ளது. மரபுவழி ஏற்றுமதிகள் உறுதியற்ற சந்தை நிலைமைகளை எதிர்நோக்கி வருவது தெரிந்தொன்றுகும். இரண்டாவதாக மூன்று முதன்மை ஏற்றுமதிப்பயிர்களும், சிறு ஏற்றுமதிகளில் ஒரு பகுதியும் வேளாண்மைப் பயிர்களாக இருப்பதால் அவைகள் கால நிலைமைகளின் தாக்கத்திற்கு உட்படுகின்றன. உற்பத்தி மட்டத்தில் ஏற்படும் எத்தகையதொரு தாக்கமும் அரசிறையின் மட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துவதால் அது, அரசு நிறைவேற்ற எதிர்நோக்கியுள்ள முயற்சிகளிலும் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தனியார் துறையின் பல்வேறு பொருளாதார முயற்சிகளுக்கும் கொடுத்கப்பபட்டுள்ள வரி தவிர்ப்புக்கள் முடிவடைந்ததன் பின்னர் நேரடி வரிகள் தொடர்மான பங்கில் அதிகரிப்பை எதிர்பார்கலாம்.

(பக்கம் 173)

(நாளை தொடரும்)

---

## அன்பளிப்பு

(நெல்லியடி)

மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு 30 கதிரைகள் 15 ஸ்ரூல்கள் ஒரு கொட்ளேட் ஒரு டோர்ச்லைட் என்பன பொது மக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இவ்வைத்திய சாலையில் கடமைபுரியும் டாக்டர் திரு. யோகநாதன் உள்வெளி நோயாளர்களுக்கு ஆற்றிவரும் நற்சேவைக்காவே இப்பொருட்கள் பொதுமக்களால் அன்பளிப்பு செய்யப்பட்டன. (செ)

......

## மின்இணைப்பு

(யாழ்ப்பாணம்)

குராவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வீதி மின் இணைப்பை மானிப்பாய் எம். பி. திரு.வி.தருமலிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

இவ்வைபவத்தில் ஏழாலை கிராமசபையின் விசேட ஆணையாளரும் உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான திரு. அன்ரன் அல்பிரட் முன்னுள் விசேட ஆணையாளர் திரு.மா. இராஜரட்னம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வெ)

......

## உதவி அரசாங்க அதிபராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி உதவி அரசாங்க அதிபராக திரு. து. வைத்திலிங்கம் இம் மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார் இவர் முன்னர் திருகோணமலை மாவட்டக்காணி அதிகாரியாகவும் தொழிற்சேவை உதவி ஆணையாளராகவும் பணிபுரிந்துள்ளார். தமிழ்ப் படைப்பிலக்கியத் துறையிலும் அக்கறை கொண்டுள்ள இவர் சிறுகதைகள் பலவற்றையும் எழுதியுள்ளார். (நா)

---

சென்.பற்றிக்ஸ்

## ஓய்வுபெற்ற அதிபர் இனி கோவில்பணியாற்றுவார்

[உடுப்பிட்டி]

''எனது முப்பது வருடக் குருத்துவ வாழ்வில் பாடசாலைகளில் கல்வித்துறையில் பணிபுரிய முடிந்தது. இதனை எனக்குக் கிடைத்த புனித பணியாகக் கருதுகின்றேன். இனி பங்குகளில் சேவை புரியப் போகின்றேன். எனக்குக் கொடுத்த ஒத்துழைப்பைப் புதிய அதிபருக்கும் வழங்கித் தனியார் கல்லூரியான இக் கல்லூரியை மேலும் மேம்படச் செய்யவேண்டும்''

இவ்வாறு யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் வண. பிதா. ஜே. ஏ. பிரான்சிஸ் அடிகளார் மேற்படி கல்லூரி அசிரியர், மாணவர்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்திற்கு நன்றி தெரிவித்து பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. ஸி. ஆர் ஜோசப் தலைமையில் நடைபெற்றஇவ்வைபவத்தில் யாழ். ஆயர், அதி. வந். பீ. தியோகுப்பிள்ளை ஆண்டகையும் கலந்துகொண்டு உரையாற்றினர். (அ)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: ஈடு/233

1. வேலுப்பிள்ளை அப்புத்துரை,
குருக்கள்மடம், மாதகல். - வழக்காளி.

எதிராக

1. விசுவலிங்சம் முத்துக்குமா ,
வட்டுக்கோட்டை கிழக் , தற்போது
வெலிக்கடை, மகாயன் றேட், வதுளை. - எதிராளி.

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் ஈடு / 233-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1980-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 29,035/-ம் 7-9-76 தொடக்கம் 21-2-78 வரைக்கும் ரூபாய் 23,000/-க்கு 9% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 690 89ம்.

### ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று, வட்டுக்கோட்டை கிழக்கும் மேற்கும் இறை. ''கொந்தனை நிமிற்றின ஒளி காத்தம'' பரப்பு நெல் இலா. 17 1/8ம் பரப்பு நில இளா. 6¾யும் கிணறும் பனைகளும் மற்றும் பயிர்களும். இதற்கு எல்லை கிழக்கு: ஒழுங்கையும், சரவணமுத்து கணபதிப்பிள்ளைக்குரிய காணியும். வடக்கு: சங்கரப்பிள்ளை நடராசாவுக்கும் முருகப்பர் நாகலிங்கத்துக்குமுரிய காணிகள். மேற்கு: கணபதி சின்னையனுக்கும், கணபதி வயித்திக்கும் முத்துமாரியம்மன் கோவிலுக்குமுரிய ஆதனங்கள் தெற்கு: முத்துமாரியம்மன் கோவில் ஆதனமும் தம்பிராசா வெள்ளையன் மகளுக்குரிய காணியும், இக்காணி E192/240 பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜே. ஏ. எட்வேர்ட்,
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.
31-12-79.

---

## புங்குடுதீவு வரவேற்பில் அரசாங்க அதிபரின் பேச்சு

### பண்டிதர் சபையில் கேள்வி

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றம் இன்று கூடும்போது; யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. யோகேந்திராதுரைசுவாமிக்கு புங்குடுதீவு மக்கள் நடாத்திய வரவேற்பு விழா பற்றி ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் [முன்னறிவித்தல் கொடுத்திருந்த கேள்வி ஒன்றுக்கு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பதிலளிப்பார்.

அமைச்சரின் வாய்மூல விடைக்காக பண்டிதர் கா. பொ.இரத்தினம்முன்னறிவித்தல் கொடுத்துள்ள கேள்விகள் வருமாறு:

''யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமிக்கு புங்குடுதீவு மக்கள் 5-9-79ல் ஒரு வரவேற்பு நடத்தினுர்கள் என்பதையும் அவ்விழாவில் மக்கள் சார்பில் அவருக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள்களையும் அவை ஒவ்வொன்றுக்கும் அவர் கூறிய மறுமொழிகளையும் அமைச்சர் கூறுவாரா?

''எமது அரசாங்கம் புங்குடுதீவு, நயினுதீவுப் பகுதிகளை ஒன்றிணைத்து தனிப்பட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவை ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுத்துள்ளது என்று அந்த விழாவில் அரச அதிபர் பேசியதாக 'ஈழநாடு' 7-9-79 இதழில் வெளிவந்துள்ளது என்பதையும் இப்புதிய பிரிவை நிறுவ அவருடைய அமைச்சு 5-9-79க்கு பின்னர் எடுத்த முயற்சியையும் அவர் கூறுவாரா?

இக் கேள்விக்கு அமைச்சர் இன்று பதிளிப்பார். (கு)

---


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலி இராசா வீதிக்கருகாமையில் இரண்டு பரப்புக்காணி புதியவீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: S நாகராசா, இராசா வீதி, திருநெல்வேலி (கிறேசருக்கு எதிர்க்கடை). 4583

யாழ். மாவட்டம் கைதடி, நாவற்குளியில் கண்டி றேட்டோரமாக கைத்தொழில் பகுதியில் ஐந்து ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு. தொழிற்சாலை அமைக்கவோ குடியிருக்கவோ உகந்தது. தொடர்புகொள்க. திரு.பாலகுமாரன், சட்டத்தரணி, 232, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 4576

### தேவை

மேசன்மாரும், கூலியாட்களும்உடன் வேலைக்குத்தேவை. தொடர்பு கொள்ளவும்: K.P. ஆனந்தன், 1/1, மின்சார நிலைய வீதி, (கிருஷ்ண ஏஜன்சி அருகே) யாழ்ப்பாணம் மற்றும் A. தம்பித்துரை, டச்சு வீதி, கட்டப்பிராய், கோப்பாய் தெற்கு, (முழுமதி சனசமூக மன்றத்தடி) கோப்பாய். 4584

சைக்கிள் திருத்துவதில் அனுபவமிக்க 'மெக்கானிக்' உடன் தேவை. நல்ல சம்பளமும், வசதிகளும் வழங்கப்படும். விண்ணப்பகாரரின் நல்லொழுக்கமும், கடமையுணர்வும் இருப்பது அவசியம். ரவர் சைக்கிள் வேக்ஸ், 324, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம். 4586

புதிதாக ஆரம்பிக்க இருக்கும் அலுமினியப் பாத்திரத் தொழிற்சாலை ஒன்றிற்கு கீழ்க் குறிப்பிடும் வேலையாட்கள் தேவை. தொழில் நுட்ப ஆலோசகர்(Technical Adviser) அனுபவமுள்ள தொழிலாளர்கள்(Experience workers) விண்ணப்பக் கடிதங்களை விளம்பர இல: 4558, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும். 4558


## 2-ம் ஆண்டு நினைவாஞ்சலி



கீழ்கரவை
பொன்னில்லம்

**பொன்னையா**

அவர்கள்

அன்பின் உறைவிடமாக அனைவரையும் அரவணைத்து வாழ்ந்த பண்புத் தந்தையே!

சோசலிச பாதையின் வழி நின்று சளைக்காது உழைத்த பெருமகன். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக கட்டைவேலி, நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிழலி தோட்டக் கிளையில் அவரது பிரதிமைப் படம் [7-1-80] திங்கள் மாலை 6 மணிக்கு திரைநீக்கம் செய்து வைக்கப்படும்.

மனைவி பொன்னம்மா,
மகள் சசிகலா,
கிழலி தோட்டக் கிளைக்
குழுவினர்.

4587

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**
தெருவோரங்களில் பசியாலும் நோயாலும் வீழ்ந்து கிடப்பவன் தான் என் கண்கண்ட தெய்வம்.
...அன்னை திரேசா.

## மக்கள் கருத்து

### இந்திய இழுவை படகுகள் அத்துமீறி தாக்குகின்றன!

இந்திய இழுவைப்படகுகள் எமது எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்துக் குறிப்பாக நெடுந்தீவு, கச்சைதீவு, நயினுதீவுக் கரையோரங்களில் மிக மிக அண்மையில் தொழில் செய்வதுடன் எமது மீன்பிடித் தொழிலாளர்களைத் தொழில் செய்யவிடாது தடுப்பதுடன், வலைகளை நாசம் செய்வதுமன்றி தொழிலாளர்களைத் தாக்கிச் செல்கின்றார்கள்.

நெடுந்தீவுக்கரையில் இந்தியர்கள் எமது தொழிலாளர்களைத் தாக்கிவிட்டுச் செல்லும் அளவிற்கு அவர்களுடைய ஆதிக்கமும் அத்துமீறலும் மிகவும் உச்சக்கட்டத்தைத் தாண்டிவிட்டதென்பதை மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

காரணம்:-25-12-79 ந் திகதி இரவு எனது கண்ணுடி நாரிழை படகில் 1. ரு. விஜயராசன், 2. சி. தமிழ்மாறன் ஆகிய இருவரும் மீன் பிடிப்பதற்காக நெடுந்தீவுக் கரைக்கு அரை மைல் தூரத்தில் வலை விரித்திருந்த சமயம் இந்திய இழுவைப் படகு ஒன்று வந்து இருவரையும் தங்கள் இழுவைப் படகில்ஏற்றி, எனதுபடகையும்தங்கள்படகுடன் இணைத்து இழுத்துச் சென்று, இருவருக்கும் அடித்ததுடன், வலைகளை (22 பீஸ்) யும் எடுத்துக்கொண்டு படகையும், இருவரையும் கச்சைதீவில்விட்டுச் சென்ருர்கள். இந்தியர்கள் இருவரையும் தாக்கும்பொழுது ''உங்கள் கடற்படையினருக்குப் போய் சொல்லுங்கள், நாங்கள் உங்களுக்கு அடித்ததாக'' ஏனெனில் ''அவர்கள் எங்கள் இழுவல்களையும் மடிகளையும் எடுத்துப்போருர்கள்'' அதனுல்தான் நாங்கள் உங்களை அடிக்கின்ருேம் என்ருர்களாம்.

ஆகவே தய்வு செய்து கூடிய விரைவில் எமது தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத்தரக் கூடியவகையில் நடவடிக்கை எடுக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இக்கடிதத்தின் பிரதிகள் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், கடற்றெழில் அமைச்சர், யாழ். அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

**செ. பாலசுப்பிரமணியம்**
மயிலிட்டி

# தேசிய வருமானமும் அதன் கணிப்பீட்டு முறைகளும்

**ஏ. எஸ். சரவணபவான் பி. ஏ. (இல.)**
(ஆசிரியர், மகாஜனக்கல்லூரி)

### தேசியவருமானம் என்றால் என்ன?

ஒரு நாட்டிற்குக் கிடைக்கும் வருமானங்களின் மொத்தம் தேசிய வருமானம் எனப்படும். இது நாட்டு வருமானம் எனவும் அழைக்கப்படும். குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் (சிறப்பாக ஒரு வருடத்தில்) ஒருநாட்டுக்கு பல்வேறு துறைகளினூடும் கிடைக்கும் வருவாய்களின் கூட்டு மொத்தம் இதனுல் வெளிப்படுத்தப்படுகிறது.

நாட்டில் மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. இவ் உற்பத்தி முழுவதும் நாட்டின் வருமானம் எனப்படும். மேலும் உற்பத்தியை மேற்கொள்வதற்காக உற்பத்திக்காரணிகள் பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்திக்காரணிகள் நிலம், முதல், உழைப்பு, முயற்சி என நான்கு முக்கிய பிரிவுகளிலடக்கப்படுகிறது. உற்பத்தியிலீடுபடும் இவ்வுற்பத்திக்காரணிகள் வருமானத்தை உழைக்கின்றன. முறையே வாடகை, வட்டி, கூலி, இலாபம் என்பவையே அவற்றின் வருமானமாகும். எனவே இவ் வருமானங்களின் கூட்டுத் தொகையும் தேசியவருமானம் எனப்படும். காரணிகள் பெறும் வருமானங்கள் நாட்டில் செலவு செய்யப்படுகின்றன. நுகர்வு, முதலீடு போன்றவற்றுக்காகவே செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே நாட்டில் அரசும், மக்களும் நுகர்வு முதலீடு என்பவற்றுக்காக செய்த செலவுகளின் மொத்தமும் தேசியவருமானம் எனலாம்.

ஒருவருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பௌதீக ரீதியான பெறுமதி வெவ்வேறு அலகுகளில் (இரு, கலன், யார்...) காணப்படுவதால் இவற்றை ஒன்றுகூட்டிக் கூறுவது கடினமாகும். எனவே உற்பத்தி முழுவதும் ஒரு பொது அலகால் அளவிடப்படுகிறது. பணமே பண்டங்களை அளவிடும் பொதுக் கருவியாகும். குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பணரீதியான மொத்தப் பெறுமதியே தேசிய வருமானம் எனப்படும்.

ஒரு உற்பத்திப் பொருளின் பெறுமதியே அப்பொருளை உற்பத்தி செய்த காரணிகளுக்கான கொடுப்பனவு ஆகும், உதாரணமாக ஒரு ஏக்கர் நிலத்தில் 10,000ரூபா பெறுமதியான நெல் உற்பத்தி செய்யப்பட்டால்; இதில் கூலியாக 2000 ரூபா, வட்டியாக 3000ரூபா, வாடகையாக 1000 ரூபா, இலாபமாக மிகுதி 4000ரூபா என்ற அடிப்படையில் காரணிகள் வருமானத்தை உழைக்கலாம். இவ் வருமானங்களின் கூட்டுத் தொகை மொத்த உற்பத்திப் பெறுமதிக்குச் சமமாக அமை வதால்; காரணகளின் வருமானங்களைக்கூட்டியும் தேசிய வருமானத்தை அளவிடலாம். இதேபோல பெற்ற வருமானங்களே செலவு செய்யப்படும் என்பதால் நுகர் செலவு, முதலீட்டுச் செலவு என்பன கூட்டப்படும் தேசிய வருமானம் அளவிடப்படுகிறது.

ஒட்டு மொதத்மாக நோக்கின்; ஒரு நாட்டில் ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், சேவைகள் என்பவற்றின் பணரீதியான மொத்த பெறுமதி அல்லது உற்பத்தியிலீடுபட்ட காரணிகள் பெற்ற வருமானங்களின் கூட்டுத்தொகை அல்லது அரசும், மக்களும் நுகர்வு, முதலீடு என்பவற்றுக்காக செய்த செலவீடுகளின் கூட்டுத்தொகை தேசிய வருமானம் எனப்படும்.

### கணிப்பிடும் முறை:

மேற்கூறிய விளக்கங்களின் படி தேசிய வருமானத்தை ஒரு நாட்டில் மூன்று வழிகளில் கணிப்பிடலாம். அவை யாவன.

1. உற்பத்திவழி.
2. வருமானவழி.
3. செலவு வழி.

### உற்பத்தி வழி:

நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பணரீதியான மொத்த பெறுமயைக் கணிப்பதே இம் முறை. ஒருநாட்டில் அதன் அரசியல் எல்லைக்குட்பட்ட பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் பணரீதியான பெறுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தி (G.D.P) எனப்படும். நாட்டின் வேளாண்மை, மீன்பிடி, சுரங்கத்துறை, வர்த்தகம் போக்குவரத்து, கைத்தொழில் போன்றவற்றின் உற்பத்திப் பெறுமதி இதில் அடங்குகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிநாட்டுக் காரணிகளின் உற்பத்தியும் அடங்குகிறது. இது கழிக்கப்படுதல் வேண்டும். ஒரு நாட்டின் காரணிகள் வெளி நாடுகளிலும் உற்பத்தியில் ஈடுபடுவதால் அவை கூட்டப்படவேண்டும். எனவே மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தேறிய வெளிநாட்டு உற்பத்தியைக் கூட்டி மொத்த தேசிய உற்பத்தி (G. N. P.) என்பது பெறப்படுகிறது. மொத்த தேசிய உற்பத்தியிலிருந்து காரணிகளின் பெறுமானத்தேய்வு கழிக்கப்படுவதால் தேறிய தேசிய உற்பத்தி (N. N. P.) பெறப்படும். மொத்த தேசிய உற்பத்தி சந்தை விலைகளில் இருக்குமாயின் வரிகளைக் கழித்து மானியங்களைக் கூட்டி காரணி விலையில் மொத்த தேசிய உற்பத்தி பெறப்படும்.

### வருமான வழி:

ஒருவருடத்தில் உற்பத்தியில் ஈடுபட்ட காரணிகள் பெறும் வருமானங்களின் கூட்டுத்தொகையே இதுவாகும். நாட்டின் அரசியல் எல்லைக்குட்பட்ட பகுதியில் நிலம், உழைப்பு முதல், முயற்சி என்ற காரணிகள் பெற்ற வருமானங்கள் கூட்டப்பட்டு மொத்த உள்நாட்டு வருமானம் (G. D. Y.) பெறப்படுகிறது. இதில் உள்நாட்டுக் காரணிகள் வெளிநாட்டில் உழைக்கும் வருமானம் அடக்கப்பட்டதால் அது கூட்டப்படுகிறது. வெளி நாட்டுக் காரணிகள் உள்நாட்டில் பெறும் வருமானம் சேர்ந்துள்ளதால் அவை கழிக்கப்படுகின்றன. எனவே மொத்த உள்நாட்டு வருமானத்துடன் தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் கூட்டப்பட்டு மொத்த தேசிய வருமானம் (G. N. Y.) பெறப்படுகிறது. இதிலிருந்து காரணிகளின் தேய்வுப் பெறுமானம் கழிக்கப்பட்டு தேறிய தேசிய வருமானம் (N. N. Y.) பெறப்படும். வருமான வழியில் தேசிய வருமானம் கணிக்கும் போது உற்பத்தியெதுவும் செய்யாது காரணிகள் பெற்ற வருமானமாகிய மாற்றுக் கொடுப்பனவுகள் (T.P.) கழிக்கப்படுவது அவசியமாகும்.

### செலவு வழி:

மக்கள், அரசாங்கத்துறை என்பவற்றின் நுகர்வு, முதலீட்டுச் செலவுகளைக் கூட்டிப் பெறப்படுவதே செலவு வழியில் தேசிய வருமானம் ஆகும். நாட்டில் அரசாங்க நுகர்வு செலவு, அரசாங்க முதலீட்டுச் செலவு, தனியார் நுகர்வு செலவு தனியார் முதலீட்டுச் செலவு என்பவை கூட்டப்பட்டு மொத்த உள் நாட்டு செலவு (G. D. E.) பெறப்படுகிறது. இச்செலவில் வெளி நாட்டுப் பொருட்களுக்கான செலவும் அடங்குவதால் அவை கழிக்கப்படுகின்றன. உள்நாட்டுப் பொருட்களை வெளிநாட்டவர் செலவு செய்து பெறுவதால் அவை கூட்டப்படுகின்றன. இதன் மூலம் மொத்த தேசிய செலவு (G. N. E.) கணிக்கப்படுகிறது.

மூன்று வழிகளில் கணிக்கப்படும் தேசிய வருமானங்களும் ஒரே முடிவையே தரும் என்பது கோட்பாடாகும். நடைமுறையில் வேறுபாடுகள் இருக்கலாம்.

(7-ம் பக்கம் பார்க்க)

# "சீனுவில் சிறுபான்மையினர் சமத்துவமாக வாழ்கிருர்கள்"

## அங்குசென்று திரும்பிய இளைஞர் தகவல்

(யாழ்ப்பாணம்)

''சீனுவில் தேசிய சிறுபான்மை இனத்தவர்கள் பெரும்பான்மை மக்களுக்குரிய சகல உரிமைகளுடன் சமத்துவமாக வாழ்கிருர்கள்'' என்று அண்மையில் மக்கள் சீனுவுக்கு விஜயஞ்செய்துவிட்டுத் திரும்பியுள்ள திரு. தணிகாசலம் கூறினுர்.

மக்கள் சீனத்தின் அழைப்பின் மீது அங்கு சென்ற இலங்கைக் குழுவில் இளைஞர் திரு. க. தணிகாசலமும் சென்றிருந்தார்,

திரு. தணிகாசலம் தாம் சீனுவில் தங்கியிருந்த ஒன்றரை மாத காலத்தில் அங்கு பல இடங்களுக்கும் சென்றதாகவும் மக்கள் வாழ்க்கை நிலை, பொருளாதார அமைப்பு, இன ஐக்கியம் முதலியவற்றை அறிந்து கொள்ள முடிந்ததென்றும் கூறினுர்:

சீனுவில் நால்வர் கும்பலின் வீழ்ச்சிக்குப் பிறகு ... வர்க்க மக்களும் ஒருங்கிணைந்து நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் பாரிய முயற்சியில் ஈடுபட்டிருப்பதைக் காணமுடிந்தது என்ருர் திரு. தணிகாசலம்.

அங்கு ஆலய வழிபாட்டுச் சுதந்திரம் இருக்கிறது. ஆலயங்கள் திறந்தேயிருக்கின்றன. ஆனல் வழிபாட்டுக்குச் செல்பவர்கள்தான் குறைவாகக் காணப்படுகிருர்கள் என்ருர்.

### 54 தேசிய இனங்களும் சமத்துவத்துடன் திகழ்கின்றனர்

#### இன ஐக்கியம்

சீனுவில் 54 தேசிய இனங்கள் இருக்கின்றன. இவ்வினங்கள் யாவும் அவைக்குரிய அந்தஸ்தோடு பேணப்படுகின்றன என்ருர்.

தேசிய இனப் பிரச்சினை மிக ... வைக்கப்பட்டுள்ளது என்று அபிப்பிராயம் தெரிவித்த திரு. தணிகாசலம், 24 தேசிய இனங்களைக்கொண்ட யூனன் மாகாணத்துக்குத் தாம் சென்றதாகவும், அங்கு ஓரின மக்களைக் கொண்ட கொம்யூன் ஒன்றுக்கு விஜயஞ்செய்தது பற்றியும் எடுத்துக் கூறினுர்.

அந்தக் கொம்யூனில் வாழும் தேசிய சிறுபான்மை இன மக்கள், ஏனைய மக்களுக்குரிய சகல சம உரிமைகளுடனும் வாழ்கிருர்கள். அவர்களின் மொழிக்கு எழுத்து வடிவம் கொடுத்து வளர்க்கப்படுகிறது என்ருர் இளைஞர் தணிகாசலம்.

புரட்சிக்கு முன்னர் அப்பகுதியில் சிறுபான்மை மக்கள் மத்தியில் வழங்கியதாகக் கூறப்படும் பழமொழி ஒன்றையும் அவர் சுட்டிக்காட்டினுர்.

''கல்லைத் தலையணையாகப் பாவிக்கமுடியாது. அதுபோல் ஹான் இனத்தவனை நண்பனுக்கிக்கொள்ளவும் முடியாது'' என்பதாம் அந்தப் பழமொழி.

ஹான் இனத்தவர்களே சீனுவின் பெரும்பான்மை மக்களாவர்.

தேசிய சிறுபான்மை மக்களின் கலை கலாச்சாரங்களும் உரிய முறையில் வளர்க்கப்படுவதாக அவர் தெரிவித்தார், பழம்பெரும் கலாச்சாரப் பண்பாடுகளைப் பேணிக்கொண்டே நவீன கலாச்சார மரபுகள் வளர்க்கப்படுகின்றன என்ருர்.

சீனுவில் பெண்கள் ஆண்களோடு சரிநிகராக உரிமைகளுடன்வாழ்கிருர்கள் என்றும் சகல துறைகளிலும் அவர்கள் வேகமுடன் முன்னேறிவருகிருர்கள் என்றும் சொன்னுர்.

தாய்நாட்டைப் பொருளாதாரப் பலத்துடன் கட்டியெழுப்புவதிலும்' தேசிய ஐக்கியத்தைப் பேணுவதிலும் சீன மக்கள் ஆர்வமுடன் செயற்படுகிருர்கள் என்றும் திரு. தணிகாசலம் கூறினுர்.

திரு. தணிகாசலத்துடன் சீனுவுக்கு விஜயஞ்செய்த குழுவில் இடம்பெற்ற திரு. கே. ஏ. சுப்பிரமணியம் இம்மாத இறுதியில் இலங்கை திரும்புவாரென்று தெரிகின்றது.

## திருக்கேதீஸ்வரம் தாகசாந்தி சபை

(மன்னுர்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை மன்னுர் சாலையினுல் வருடாவருடம் நடாத்தப்படும் திருக்கேதீஸ்வரம் தண்ணீர் பந்தல் சபைக்கு புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பொறியியல் அதிகாரி திரு. வி. மகேஸ்வரனும், சாலை அத்தியட்சகர் திரு. ஐ. சண்முகநாதனும், தலைவராக திரு. து. உமாபதிசிவமும், இணைச்செயலாளர்களாக திருவாளர்கள் ச. சண்முகநாதன், கே. சோமசுந்தரம் ஆகியோரும், இணைப் பொருளாளர்களாக திருவாளர்கள் ரி. சுந்தரலிங்கம், ஈ. எம். இராசதுரையும் தெரிவாகினர். 18 பேர்களைக்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “நவீன விவசாயமுறைக்கு அரசு உதவவேண்டும்”

## இராஜலிங்கம் எம்.பி.

(உடுப்பிட்டி)

“கால்நடை வளர்ப்பின் மூலம் நமது விவசாயிகள் அதிக வருவாயை பெறமுடியும். கால்நடை வளர்ப்பை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டத்தக்கதாகும்.”

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. க. இராஜலிங்கம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற உடுப்பிட்டித்தொகுதி விவசாயிகள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட கமநலச் சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. கே. பரமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உடுப்பிட்டி எம்.பி. மேலும் கூறியதாவது:-

எமது நாட்டின் பொருளாதாரத்தின் அடிதளம் விவசாயத்திலேயே தங்கியுள்ளது. விவசாயிகளைக் கௌரவிக்குமுகமாகவே தொகுதிகள் தோறும் இவ்விசாய விழாக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

ஒரு நாடு சுந்தரம் அடைந்தாலும் பொருளாதார சுதந்திரம் இல்லாவில் அரசியல் ஒருபோதும் கிடையாது. விவசாயிகள் விவசாயத்தில் புதிய முறைகளைப் புகுத்தி அதிக உற்பத்தியைப் பெறலாம். நவீன முறைகளைப் புகுத்துவதனால் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கிறது. இதனால் விவசாயிகளுக்கும் பெருங்கஷ்டமும் ஏற்படுகின்றது. ஆதலால் அரசாங்கம் விவசாயிகளுக்கு நிவாரணமளிக்க வேண்டியது அவசியம்.

சனத்தொகை அதிகரிப்பால் விவசாய நிலத்திற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுவருகின்றது. குறைந்த நிலப்பரப்பில் அதிகளவு உற்பத்தியை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. எனவே விவசாயிகள் வேறு இடங்களுக்கும் சென்று விவசாயத்தில் ஈடுபட முன்வரவேண்டும்.” (அ)

# “நியாய விலையில் அரிசி பெற்றுத்தருக”

(புலோலி)

தற்பொழுது புலோலி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் தனிப்பட்ட வர்த்தகர்களிடமிருந்தே அரிசியை வாங்கிவருகின்றது. ஆனால் சுவாத்திய வேறுபாடுகள் காரணமாக இவர்கள் சில காலங்களில் மிகக்கூடுதலான விலையில் இவ்வரிசியை விற்கிறார்கள். இவ்வுயர்வு நுகர்வோரையும் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே இச்சங்கத்திற்குத் தேவையான அரிசியை உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி மூலம் நெல்சந்தைப் படுத்தும் சபையிடமிருந்து பெற்றுத்தரவேண்டும். இதன் மூலம் நுகர்வோரைப் பாதுகாக்கமுடியும்.”

இவ்வாறு கோரும் மகஜரை புலோலி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. வ. செல்வராசன் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோனிடம் கையளித்துள்ளார்.

பிரஸ்தாப மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இச்சங்கம் கூட்டுறவு அடிப்படையில் ஒருபடமாளிகையை நடத்திவருகிறது. ஆனால் நிதிநிலைமை காரணமாக இப்படமாளிகைக்கு புதிய நல்ல படங்கள் கிடைப்பதில்லை. எனவே அரசதிரைப்படக் கூட்டுத்தாபனப் பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு புதிய நல்ல படங்களைப் பெற்றுத்தரவேண்டும்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு துரதிர்ஷ்டமான சம்பவத்தால் இச் சங்கத்தின் கிராமிய வங்கி மூடப்பட்டது. இதனால் எமது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே மீண்டும் இக்கிராமிய வங்கியைத் திறந்து வைக்கவும்.

......

# ஆசிரியர் புதியசம்பளம் ஏப்ரலிலிருந்து அமுல்

(மட்டக்களப்பு)

ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத்திட்டம் ஏற்கனவே திட்டமிட்டபடி இம்மாதம் முதல் அமுல் செய்யப்படமாட்டாதென அறியப்படுகின்றது.

ஏற்கனவே இருபத்தொரு பிரிவுகளைக் கொண்டதாக ஆசிரியர்களின் சம்பள விகிதம் இருந்து வந்தது. இதனைக் கல்வி அமைச்சு குறைத்து நான்கு பிரிவாக்கி இத்திட்டத்தை இம்மாதம் முதல் அமுல் செய்யவிருந்தது.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் இதனை அமுல் செய்ய முடியாத நிலை இருப்பதாகவும் இப்புதிய சம்பளத்திட்டம் புத்தாண்டு முதல் அமுல் செய்யப்படலாம் எனவும் தெரிகின்றது. (அ)

......

# மட்டு. பஸ் நிலையத்தில் தபால் நிலையம் அவசியமாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையம் முன்பதாக பிரயாணிகள் நலன்கருதி உப அஞ்சல் நிலையமொன்று அமைக்கப்பட வேண்டுமென பிரயாணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்,

மட்டக்களப்பு பஸ்நிலையத்திலிருந்து தபால் நிலையம் சற்றுத் தொலைவில் இருப்பதால் தூர இடங்களிலிருந்து வருகின்ற பிரயாணிகள் கஷ்டம் அடைகின்றனர்.

இவர்களின் நலன்கருதி கல்முனை, திருமலை, யாழ்ப்பாணம் கடைத்தெருவில் உப அஞ்சல் நிலையங்கள் இருப்பதுபோல் மட்டக்களப்பிலும் அமைந்தால் மிகவும் நல்லது என பிரயாணிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். (அ)

......

# இலவசநூல் 16-ல் விநியோகம்

(நெல்லியடி)

உடுப்பிட்டி கல்வி வட்டாரத்திலுள்ள மாணவர்களுக்கு இலவச படநூல் விநியோகம் இம்மாதம் 16-ம் திகதி ஆரம்பித்து வைக்கப்படும்.

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இப்பாடநூல் விநியோகத்தை ஆரம்பித்து வைப்பார். (கு)

# “தமிழக ஆலயங்களை விட ஈழத்திலுள்ளவை சிறப்புடையவை

## -தமிழக பேராசிரியர்தகவல்

(சுழிபுரம்)

“தமிழ்நாட்டிலுள்ள ஆலயங்களின் சிறப்புகளிலும் மேலாக ஈழத்திலுள்ள சைவ ஆலயங்கள் விளங்குகின்றன. இங்குள்ள பக்திமயம் ஒன்றே வழிபாட்டின் மேன்மைக்குப் போதுமானதாகும். பண்பாடு, பக்தி, ஒழுங்கு யாவும் இங்கு நிறைந்திருக்கின்றன.”

இவ்வாறு தருமையாதீனம் பல்கலைக்கழகக் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் இரா. செல்வக்கணபதி சித்தங்கேணி ஸ்ரீசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற மணிவாசகர் விழாவில் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சட்டத்தரணி எம். கே. சுப்பிரமணியம் தலைமைவகித்த இவ்விழாவில் பேராசிரியர் இரா. செல்வக்கணபதி மேலும் பேசுகையில் “மனிதன் மனிதனை வாழவேண்டும். ஒருவன் வீட்டைக் கட்டுவது, விஷப் பூச்சிகள், பாம்பு போன்றவற்றிலிருந்து தப்புவதற்காக மட்டுமல்ல, அயல் மனிதன் அத்துமீறிப் பிரவேசிக்காமலும், தொல்லைகள் கொடுக்காதிருப்பதற்கும் என்பதை நாம் அறிவோம். விஷப் பூச்சிகள் பாம்புகள் போன்றவற்றிலிருந்து ஒருவன் தப்பிக்கொண்டாலும் மனிதன் ஒருவனிடமிருந்து காக்கப்படுவதுதான் மிகவும் முக்கியமாகும்.

“அயலவனை நேசிக்கும் பண்பைப் போதிப்பதே எமது சமயம். அதையே எமக்கு நாயன்மார்கள் அருளிய தேவார, திருவாசகங்கள் புகட்டுகின்றன. தானும் வாழ்ந்து, பிறரும் வாழவைக்கும் கருத்துக்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்” என்றார். (சு)

......

# நிரந்தர அதிபர் இல்லை

(புலோலி)

பருத்தித்துறை கல்வி வட்டாரத்திலுள்ள புலோலி மெ. மி. த. க. பாடசாலைக்கு நிரந்தர அதிபர் இல்லாமையால் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

பாடசாலை புதிய ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் விடுகைப் பத்திரம் பெறமுடியாமல் சில பெற்றோர் சிரமப்படுகிறார்கள். (ஏ)

......

# பாடசாலைப் பொன்விழா

(சரவணை)

சரவணை நாகேசுவரி வித்தியாசாலையின் பொன்விழாவை எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தில் கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

தீவுப்பகுதி எம். பி. டண்டிநர் திரு. கா. பொ. இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் கவியரங்கம், பட்டிமன்றம் என்பனவும் நடைபெறும். ([illegible])

# சண்டனக்கூட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட கூட்டுறவு ஊழியர் சங்கத்தினர் மன்னார் அயின் படமாளிகையில் மன்னார் மாவட்ட தலைவர் திரு.எம். கே. சிகாமணி தலைமையில் அண்மையில் கண்டனக் கூட்டம் ஒன்றை நடாத்தினர்.

மாந்தை தெற்கு உயிலங்குளம் ப. நோ. கூ. சங்கத்தைச் சேர்ந்த ஒரு பெண் உட்பட மூன்று ஊழியர்களுக்கு இயக்குனர் சபையால் வழங்கப்பட்ட அநீதிகளைக் கண்டிக்கும் முகமாக இக் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

# நீரைப் பாதுகாக்க வேண்டும்

(நெல்லியடி)

“வரண்ட பிரதேசத்தில் வாழுகின்ற நாம் தேவையை நன்குணர்ந்து தேவைக்கு மேலதிகமாக உபயோகிக்காது நமது இயற்கை வளத்தைப் பாதுகாக்கவேண்டும்.”

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் கரணவாய் கிராமத்தில் இரண்டரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மின் விஸ்தரிப்பை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திரு கி. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் பேலும் பேசுகையில், நீரினைச் சிக்கனமாக உபயோகிப்பதுபோல, எரிபொருட்களையும் உபயோகிக்க வேண்டும் என்றார். (சு)

# இவர்களுக்கு ஒன்றரைக் கோடி ரூபா

(கொழும்பு)

வேலையிழந்த “எயர் சிலோன்” ஊழியர்களுக்கு வெகுமானமாகவும், நஷ்டஈடாகவும் 1 கோடியே 45 லட்சம் ரூபாவை அரசாங்கம் வழங்கியுள்ளது. (வெ)

# வீட்டுக்கூரை மரங்களுக்கு உத்தரவுப் பத்திரம்

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் உள்ளவர்கள் தமதுவீடுகளுக்கு தேவையான கூரைக்குரிய மரங்களையும், வீறகுகளையும் உத்தரவுப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டுவரலாம்.

உத்தரப்பத்திரங்களைவழங்க ஒவ்வொரு வியாழக்கிழமையும் மன்னார் கச்சேரியில் உள்ள காணிஅலுவலகத்திற்கு காட்டு இலாகா அதிகாரி திரு. குமாரசாமி வருகை தருவார்.

......

# நூல் விநியோகம்: தனியாரிடமிருந்து பெறப்பட்டது

(நெல்லியடி)

உடுப்பிட்டி கல்வி வட்டாரத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ள 30,846 புத்தகங்களில் சுமார் 7709 புத்தகங்கள் தனியார் வர்த்தகர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இவற்றின் மொத்தப் பெறுமதி 31,174 ரூபா 25 சதம் ஆகும்.

பாடசாலை மாணவர்களிடமிருந்தும் சுமார் 1429 புத்தகங்கள் வட்டாரக்கல்வியதிகாரி திரு. வி. கே. ஈசுவரபாதம் அவர்களினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. [கு]

# ச.ச.நிலைய ஆண்டு விழா

(சரவணை)

புங்குடுதீவு இருபிட்டி சனசமூக நிலையத்தின் 30-வது ஆண்டுவிழா எதிர்வரும் 14, 15-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

இவ்வாண்டுவிழாவையொட்டி புதிய நூல் நிலைய திறப்புவிழாவும் நடைபெறஏற்பாடாகியுள்ளது.

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம் மரதன் ஓட்டம் கரபந்தாட்டம் முதலிய விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறவிருக்கின்றன. (அ)

......

# அதிபர்கள் மாநாடு இன்று

(நெல்லியடி)

கல்விப்பொதுத்தராதர உயர்தரவகுப்புள்ள பாடசாலை அதிபர்களின் மாநாடொன்று இன்று தொண்டமனாறு வெளிக்கள ஆய்வு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வடமாநில மேலதிகக் கல்விப்பணிப்பாளர் திரு. கே. எஸ். சிவநாதன் தலைமையில் நடைபெறும். இம் மாநாட்டில் கல்வித்தரத்தினை உயர்த்துவது பற்றியும் நேரசூசி தயாரிப்பு மாணவர்களின் வரவு [illegible] கள ஆய்வுகள் பற்றியும் ஆராயப்படவுள்ளது. [illegible]

# கே விலில் திருட்டு

(நெல்லியடி)

பருத்தித்துறை மாயக்கை பிள்ளையார் ஆலயத்தில் விக்கிரகத்தின் கீழ் வைக்கப்பட்டிருந்த தங்கத்தகடுகள் களவாடப்பட்டுள்ளது:

இரவு நேரத்தில் நடைபெற்ற இத்திருட்டுப்பற்றி பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. ([illegible])

......

# வீதிகள் புனரமைப்பு

(நெல்லியடி)

உடுப்பிட்டி கிராமச்சபையின் சக்ளாவத்தை வீதி சுமார் 60 ஆயிரம் ரூபா செலவிலும் நெல்லியடிப் பட்டின சபையின் மாப்பிளை வீதி சுமார் 40 ஆயிரம் செலவிலும் புனரமைக்கப்பட்டுள்ளது.

இவ்வீதிகளை அமைப்பதற்கான நிதியினை பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து [illegible] இராசலிங்கம் ஒதுக்கீடு செய்திருந்தார். (கு)

# திருவிருந்து ஆராதனை

(அரியாலை)

தர்மபுரம் பரிசுத்த பவுல் ஆலயத்தின் வருடாந்த நத்தார் பரிசளிப்பு விழாவும், கதம்ப நிகழ்ச்சிகளும் எதிர்வரும் 13ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது

ஆலயத்தில் நடைபெறவிருக்கும் திருவிருந்து ஆராதனையை யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு சாம் டி ஹோர்சிங்டன் அடிகளாரும், அருட்திரு ஜே. சர்வானந்தன் அடிகளாரும், அருட்திரு ஐசக் செல்வரத்தினம் அடிகளாரும் நடாத்துவார்கள்.

ஆராதனையின் பின்னர் [illegible] விருந்துபசரணையும் நத்தார் பரிசளிப்பு விழாவும் நடைபெறும்.

......

## கல்முனைத் தொகுதி

# அபிவிருத்தி வேலைகள் கைவிடப்படலாம்

(கல்முனை)

கல்முனைத் தேர்தல் தொகுதியில் பொது வேலைத் திட்டங்களுக்கு நிலம் பெறுவது கஷ்டமாகவுள்ளதாம், இதன் எதிரொலியாகப் பல அபிவிருத்தித் திட்டங்களைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சாய்ந்தமருதுபகுதிக்கான அரசாங்க அலுவலகங்கள் யாவும் தாமரைக்குளம் என்னும் பகுதியில் அமைக்கப்பட இருக்கின்றன. இது தொடர்பான வேலைகளை கல்முனை எம். பி.யும், முல்லைத்தீவு மாவட்ட அமைச்சருமான ஜனாப் ஏ. ஆர். எம். மன்சூர் மேற்கொண்டுவருகிறார்.

பொது நூல்நிலையம், பொது விளையாட்டு மைதானம், தபால் நிலையம் ஆகியவற்றை இப்பகுதியில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்ச் செய்திக

(மன்னார்)
தலைமன்னார் பியர் இறங்கு துறையில் பிரயாணிகள் தங்குவதற்கு கட்டப்பட்டுவரும் கட்டிடம் முடியும் தறுவாயில் உள்ளது.

புகையிரதத் திணைக்களத்தினால் கட்டப்பட்டுவரும் இப் பிரயாணிகள் விடுதி வாடகைக்கு விடப்படுமென அறியப்படுகிறது. இதனால் இலங்கையிலிருந்து இந்தியா செல்வோரும், இந்தியாவிலிருந்து இலங்கை வருவோரும் பெரிதும் நன்மையடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

0 0 0

### ராமேஸ்வரத்திலிருந்து உல்லாசப்பிரயாணிகள் அதிகம்பேர் வந்தனர்

(மன்னார்)
காலநிலைச் சீர்கேடு காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த தலைமன்னார்-ராமேஸ்வரம் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பித்துள்ளது. முதல் தடவையாக ராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னார் வந்த கப்பலில் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளே அதிகமாக வந்தனர்.

0 0 0

### மன்னார் ஆஸ்பத்திரி டாக்டர்களுக்கு பிரிவுபசாரம்

(மன்னார்)
மன்னார் அரசினர் வைத்தியசாலை டாக்டர் திருமதி சுலோசினி மகேந்திரன் கொழும்பு இருதயநோய் வைத்தியசாலைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

மன்னார் அரசினர் வைத்தியசாலை டாக்டர் திரு. மகேந்திரன் தமது பதவியை ராஜினாமாச் செய்து வெளிநாடு செல்லவுள்ளார். இவரது இடத்திற்கும் இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

மேற்படி இடமாற்றம் பெற்றுச்செல்லும்இருடாக்டர்களுக்கும் மன்னார் அரசினர் ஆஸ்பத்திரி நலன்புரிச்சங்கத்தினரால் பிரிவுபசாரவைபவம் நடத்தப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (அ)

# ப. செ. உத்தியோகஸ்தர் பிரச்னை: 'அமிர்' அமைச்சருடன் பேசுவார்

## மட்டக்களப்பில் தகவல்

(மட்டக்களப்பு)
பயிர்ச் செய்கை உத்தியோகஸ்தர்களின் பிரச்னைகளைத் தீர்க்க காணி விவசாய அமைச்சருடன் தொடர்பு கொள்வேன்

மேற்கண்டவாறு மட்டக்களப்பு மாவட்ட பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் மத்தியில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார். கடந்த வாரம் மட்டக்களப்பு சிவானந்தா ஆச்சிரமத்தில் மாவட்டபயிர்ச் செய்கை உத்தியோகத்தர் சங்கக் கூட்டம் சங்கத் தலைவர்: திரு. பூ. நடேசானந்தம் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் விசேஷமாகக் கலந்து கொண்ட திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் " பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களின் நிலைகள் கஷ்டங்கள் எனக்குத் தெரியும். அவர்களுக்கு மோட்டார்சைக்கிள், போக்குவரத்துப்படி என்பன நியமனம் பெற்று ஒன்றரை வருடகாலமாகியும் இதுவரை வழங்கப்படவில்லை. இவ்விடயம் குறித்து காணி, விவசாய ஆராய்ச்சி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகாவுடன்பேச்சுவார்த்தை நடத்துவேன்" என தெரிவித்தார்.

மற்றும் இக்கருத்தரங்கில் பட்டிருப்பு பா. உ. திரு. பூ. கணேசலிங்கம், இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. டி. எஸ். கே. வனசிங்கா உட்படப் பலர் கருத்துரை வழங்கினர்.

# "வல்லிபுரத்தில் கண்ணாடி தொழிற்சாலை நிறுவுக"

## மாவட்ட அமைச்சருக்கு மகஜர்

(புலோலி, உடுப்பிட்டி)
புலோலி, உடுப்பிட்டி, பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள வல்லிபுரப்பகுதியில் கண்ணாடி செய்வதற்கான மூலப்பொருட்கள் இருப்பதனால் அங்கு ஒரு கண்ணாடித் தொழிற்சாலையை நிறுவி இப்பகுதி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

மேற்கண்டவாறு புலோலி பெரிய தேவனத்தாய் சனசமூகநிலையமும், புலோலி கிராம அபிவிருத்திச் சங்கமும் இங்கு விஜயம் செய்த யாழ். மாவட்டஅமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோனிடம் சமர்ப்பித்த மகஜரின் மூலம் கேட்டிருக்கிறது.

இம்மகஜரில் தெரி[illegible]ப் பட்டுள்ளதாவது:

புலோலி, புற்றளை மகா வித்தியாலயத்தில் சுமார் 800 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர், இம்மாணவர்கள் புலோலியிலிருந்தும், பின் தங்கிய கிராமங்களாகிய குடத்தனை, அம்பன், மணற்காடு ஆகிய பகுதிகளிலிருந்தும் இங்கு வந்து கல்வி பயில்கின்றனர். இம்மாணவர்களின் நன்மைகருதி மண்டபமொன்று அமைத்துத்தரவேண்டும். இப்பாடசாலைக்கு நிரந்தரமான விளையாட்டு மைதானமொன்றும் அமைத்துத்தரவேண்டும். மாவில் வெளியில் உள்ள செல் விளையும் பகுதி வருடாந்தம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வருவதால் ஒரு கான் வெட்டி இவ்வெள்ளத்தை வடியச்செய்தல் வேண்டும்.

இச்சனசமூக நிலையம் ஆயிரத்துக்கு அதிகமான மக்க

(8-ம் பக்கம் பார்க்க)

## ஷங்காயில் மேயர் குழு

(கொழும்பு)
கொழும்பு மேயர் திரு. சிறிசேன கூரேயின் தலைமையில் சென்ற இலங்கை மேயர்குழு ஷங்காய்ப் பகுதிக்கு விஜயம் செய்தது. ஷங்கா மாநகர சபையாலும் அதன் வெளிநாட்டு அதிகாரிகளினாலும் இவர்கள் வரவேற்கப்பட்டனர்.

இக்குழுவினர் ஷங்காய் கைத்தொழில் பொருட்காட்சிக்கு விஜயம் செய்ததுடன் ஷங்காயிலுள்ள பௌத்த விகாரைக்கும் சென்றனர்.

ஷங்காய் மாநகரசபை அதிகாரிகளுடன் நகர அபிவிருத்திபற்றியும் திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடியதுடன் வீடமைப்பு மின்சார குடிநீர் சூழல் பாதுகாப்புத்திட்டங்கள் பற்றியும் கேட்டறிந்து கொண்டனர்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும்அபிவிருத்தித்திட்டங்கள் பற்றி சீனத்தலைவர்கள் திருப்தி தெரிவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. (செ)

# தேவிபுரம் தெற்குக்கு புதிய கிராம அபிவிருத்திச் சங்கம்

(உடையார்கட்டு)
தேவிபுரம் தெற்குப்பகுதிக்கு ஒரு கிராமாபிவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ள்ளது. தேவிபுரம் தெற்குத் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற சங்க அமைப்புக் கூட்டத்திற்கு புதுகுடியிருப்புகிராம அபிவிருத்தி உத்தியோகததர் திரு. எஸ். கந்தசாமி தலைமை வகித்தார். புதுக்குடியிருப்பு மேற்குக் கிராம சேவை அலுவலர் திரு. பி. பரமலிங்கமும் கூட்டத்திற்கு வந்திருந்தார்,

புதுக்குடியிருப்புத் தென்பகுதிக்குத் தனியான கிராம முன்னேற்றச் சங்கம் அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி திரு. இ. பஞ்சாட்சரம் கொண்டு வந்த பிரேரணை திரு. ந. சண்முகரத்தினத்தால் அனுவதிக்கப்பட்டது, சி. அ. உத்தியோகஸ்தர், சங்கத்தின் நோகம் பற்றி எடுத்து விளக்கினர்.

சங்க உத்தியோகஸ்தர்களனைவரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். விபரம் வருமாறு: தலைவர். ப. சண்முகம் (சண்முகநாதன்) செயலாளர்: அ. ஜோர்ஜ் வாஷிங்டன், உபதலைவர்: எம். பி. சோமசுந்தரம், உப செயலாளர்: கே. வி. கே. நாகசிங்கம், பொருளாளர்: இ. நாகராசா. உறுப்பினர்கள் எஸ். கயிலாயர், சி. தங்கவடிவேல், அ. யேசுதாஸ், என். ஆனந்தம், இ. சிவஞானம், ஆ. வடிவேல், கணக்காளர் இ.பஞ்சாட்சரம்.

இச்சங்கத்தின் தலைவர்திரு. சண்முகம் முன்பு தேவிபுரம் வடக்கு, தெற்கு இரண்டிற்கும் பொதுவாக அமைந்திருந்த கி. அ. சங்கத்தில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் தலைவராகப் பதவிவகித்து வந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# முல்லைத்தீவுசந்தை பட்டினசபை பொறுப்பேற்றது

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவுப் பொதுச் சந்தை புதுவருட ஆரம்பத்திலிருந்து முல்லைத்தீவுப் பட்டினசபையின் நேரடிப் பொறுப்பில் நிர்வகிக்கப்படவிருக்கின்றன. இதுவரைகாலமும் தனிப்பட்ட குத்தகைக்காரர்களாலும், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினாலும் இது நடாத்தப்பட்டுவந்தது. இந்த வருடத்திலிருந்து பட்டினசபையே இதனைப் பொறுப்பேற்று நடாத்தவிருக்கின்றது.

இதனைப் பொறுப்பேற்று நடாத்துவதற்கான ஊழியர்கள் நேர்முகப் பரீட்சையின்றிச் செல்வாக்கின்பேரில் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வரிப்பிறுப்பாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனராம்.

# "தொழிலாளர்களால் நாட்டை ஆளவும் முடியும்"

(யாழ்ப்பாணம்)
"தொழிலாளிவர்க்கத்திற்கும் நாட்டின் ஆட்சியைப் பொறுப்பெடுத்து நடத்துவதற்குரிய வல்லமை உண்டு."

இவ்வாறு குருநகர் சீநோர் அபிவிருத்தித் திட்டத்தின் மீன்பிடி வலைத் தொழிற்சாலை மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை எஞ்ஜினியரிங் தொழிலாளர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச உதவிச் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் கூறினார்.

திரு. ஏ. சதாசிவம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:- "தொழிலாளிவர்க்கத்தினிடையே ஐக்கியம் முக்கியம். அவர்களின் நண்பர்கள் யார்? பகைவர்கள் யார் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். இன்று தொழிலாளிவர்க்கத்தையே பிரச்னைகள் எதிர்நோக்குகின்றன. போராட்டங்கள் மூலமும் தியாகங்கள் மூலமும் வென்றெடுக்கப்பட்ட பல உரிமைகள் இந்த அரசாங்கத்தால் பறிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளுக்காக விட்டுக்கொடுக்காத சளைக்காத போராட்ட[illegible] நடத்தத் தயாராகிக்கொள்ள வேண்டும்" என்றார்.

திருவாளர்கள்:- வி. ரீ. [illegible]கிரன், ஜே. ஜெபதாஸ், எஸ். சுரேந்திரன், என். இராசசேகரம்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினர், புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது. (கோ-ஏ)

# மூலவளஆய்விற்கு புதிய கட்டிடம்

(நெல்லியடி)
கோப்பாய் கல்வி வட்டாரத்திலுள்ள புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாசாலையில் முதியோர் கல்வித்திட்டத்திற்காகவும் மூலவள ஆய்விற்காகவும் புதியதொரு கட்டிடம் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக் கட்டிடம் சுமார் 80 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. (கு)



தஞ்சாவூரில் நடைபெற்ற பெரியார் நூற்றாண்டு நிறைவுவிழாவில் கலைஞர் பேசுவதை 1-வது படத்திலும், திரைப்பட இசைஅமைப்பாளர் கங்கை அமரன், திராவிடர்கழக பொதுச் செயலாளர் வீரம[illegible] ப்டுதை 2-து படத்திலும், பெரியாரின் உருவப் படத்தை 3-வதுபடத்திலும், இலங்கை-இந்திய வானொலி [illegible] தன் பெரியார் [illegible] தாமே இயற்றி, இசை அமைத்து தமிழ், ஆங்கில [illegible] பாடுவதை இறுதிப் படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### ஆப்கானிஸ்தானில் சோவியத் தலையீடு

# ஐ.நா. பாதுகாப்புச்சபையில் விவாதம் ஆரம்பம்:

# துருப்புக்கள் திருப்பி அழைக்கப்பட வேண்டும்!

## ஐம்பதுக்கும் அதிகமான நாடுகள் கோரிக்கை

நியூயோர்க், ஜன, 6

**ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனின் தலையீட்டையடுத்து எழுந்துள்ள பிரச்னை பற்றிய விவாதத்தை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை ஆரம்பித்தது..**

பாதுகாப்புச்சபையின் இந்த நடவடிக்கை ஆப்கானிஸ்தானின் உள்நாட்டுப்பிரச்னையில் தலையிடுவதாக அமையுமென்று சோவியத்யூனியன் விவாதத்தைத் தடுக்கமுயன்றபோதும் பாதுகாப்புச்சபை தனதுவிவாதத்தை நேற்று ஆரம்பித்தது.

காபூல் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டதன் பேரில்தான் தனது துருப்புக்களை அனுப்பியது என்று சோவியத் யூனியன் பிரதிநிதி தெரிவித்தார்.

"ஆப்கானிஸ்தானிலுள்ள சோவியத்யூனியனின் துருப்புக்களை திருப்பி அழைக்கவேண்டுமென்று பாதுகாப்புச்சபை கோரவேண்டும்" என்று ஐம்பதுக்கும் அதிகமான நாடுகள் வற்புறுத்தின.

ஆப்கானிஸ்தானிலுள்ள சகலவெளிநாட்டுத் தூதுவர்களையும் வெளியேறவேண்டும் என்று பாதுகாப்புச்சபை கோரவேண்டுமென பாகிஸ்தான் தூதுவர்கேட்டுக்கொண்டார்!

பாகிஸ்தானின் கோரிக்கை தீர்மானமாக எடுக்கப்படலாமென்று நம்பப்படுகிறது. இதே வேளையில் பாதுகாப்புச் சபையின் இந்தவிவாதத்தில் கலந்துகொள்ளுமாறு ஆப்கானின் புதிய வெளியுறவு அமைச்சருக்கு சபை அழைப்பு விடுத்திருந்தது. பாதுகாப்புச்சபையின் இந்த அழைப்பை பிரிட்டன் பிரதிநிதி கண்டித்ததுடன் ஆப்கானிஸ்தானின் இப் புதிய அரசை ஏற்றுக்கொள்ள முடியாதென்று தெரிவித்துள்ளார். (கு)

## பருத்தித்துறை மரவிற்பனைநிலையத்தை ப.நோ. கூ.சங்கம் பொறுப்பேற்றது

(புலோலி)

பருத்தித்துறைப் பகுதி மக்களுக்குச் சிறந்த சேவையை அளிப்பதற்கான துரித நடவடிக்கைகளைப் பருத்தித்துறைப் பல நோக்குக் கூட்டுறவுக் சங்க இயக்குநர் சபை மேற்கொண்டுவருகிறது.

பருத்தித்துறையில் இதுவரை காலமும் அரச மரக்கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டு வந்த மர விற்பனை நிலையத்தை இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொறுப்பேற்று நடாத்தவுள்ளது.

மூடப்படிருந்த பாண் பேக்கரியை மீண்டும் இப்பகுதி மக்களின் நன்மை கருதித் திறக்கவுள்ளது.

அத்துடன் 78 / 79 ம் ஆண்டு இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 91,562 ரூபா 91 சதத்தை இலாபமாகப் பெற்றுள்ளதாகவும் சங்கத்தின் பொது முகாமையாளர் திரு. எஸ். சதாசிவம் தெரிவித்தார். (அ)

......

# ஆப்கானில் ரஷ்ய தலையீடு:

# பாக். அதிபர் ஆலோசனை

ராவல்பிண்டி, ஜன, 6

ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் எழுந்துள்ள நிலைமைகள் குறித்து பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக் பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆலோசனை நடாத்தினார்.

சோவியத் யூனியனின் பயமுறுத்தலை எதிர்த்துச் சமாளிப்பதற்காக ஆயுத உபகரணங்கள், உணவு முதலியவற்றை பாகிஸ்தானுக்கு வழங்குவதென்று அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மிகார்ட்டர் அறிவித்ததைத் தொடர்ந்து அதிபர் ஹக் இந்த ஆலோசனையை நடாத்தினார்.

நீண்டநேரமாக நடைபெற்ற இந்தஆலோசனைக்கூட்டத்தில் பாகிஸ்தான் இராணுவம், கடற்படை, இரகசியப் படை ஆகியவற்றின் தளபதிகள் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனாலும் அமெரிக்க இராணுவ உதவிபற்றியே ஆராயப்பட்டதாக வெளிநாட்டு ராஜதந்திரிகள் தெரிவித்தனர். (கு)

## சரண் தொகுதியில் மீண்டும் வாக்களிப்பு

(புதுடில்லி)

இந்திய காபந்து பிரதமர் திரு. சரண்சிங் போட்டியிடும் பக்தத் தொகுதியிலும் அவரது மனைவி போட்டியிடும் கைரானு தொகுதியிலும் முதல் கட்ட வாக்களிப்பில் ஊழல் இடம் பெற்றதை அடுத்து நேற்று மீண்டும் வாக்களிப்பு இடம் பெற்றது.

இருதொகுதிகளும் உத்தரப் பிரதேசத்தில் உள்ளன.

## நயினையில் திருவெம்பாவை இரவுப்பஜனை

(நயினாதீவு)

மார்கழி மாதத்தில் நிகழும் திருவெம்பாவைப் பஜனை நிகழ்ச்சிகளில் வருடாவருடம் ஈடுபாடுகொண்டு தளராது பணிபுரிந்துவரும் நான்கு பஜனைக்கோஷ்டிகளும் இம்முறையும் தமது திருப்பணியினைச் சிறப்பாக நிறைவேற்றினர்.

நயினைநாகபூஷணி அம்மன் ஆலயத்தில் திருவெம்பாவைக் கடைசி நாளான திருவாதிரையன்று பஜனை மிகச் சிறப்பாக நடைபெற்றது. [நா]

# ஆப்கான் நிலைமை

## சோவியத் விளக்கம்

மாஸ்கோ, ஜன. 6

ஆப்கானிஸ்தானில் ஏகாதிபத்தியவாதிகளின் தலையீடு நிறுத்தப்படும்வரை தனது படைகள் திருப்பி அழைக்கப்படமாட்டாது என சோவியத் யூனியன் தெரிவித்துள்ளதாக சோவியத் பத்திரிகையான 'பிராவ்தா' தெரிவித்துள்ளது.

ஏகாதிபத்தியவாதிகளின் தலையீடு இல்லாது ஆப்கான் மக்கள் சுதந்திரமாக வாழும் சூழ்நிலை ஏற்பட்ட பின்னரே ரஷ்யப்படைகள் வெளியேறுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் சீனு விஜயம்

வாஷிங்டன், ஜன. 6

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. கரோல் பிரவுண் ஒருவாரகாலவிஜயத்தை மேற்கொண்டு நேற்று சீனுவுக்குப் பயணமானுர்.

ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனின் தலையீடு பற்றி சீனத்தலைவர்களுடன் அவர் ஆராய்வாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. - திரு. பிரவுண் சீனுவிலிருந்து திரும்புவதற்கு முன்னர் பாகிஸ்தானுக்கு அமெரிக்காவும் சீனுவும் ஆயுத விநியோகம் பற்றியும் சீனத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவாரென்று அமெரிக்கபாதுகாப்புஅமைச்சு அதிகாரி ஒருவர்தெரிவித்தார். (கு)

## செவ்வாய் வரை ஒலிபரப்பு தொடரும்

(புதுடில்லி)

இந்திய தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் அறிவிப்பதற்காக இந்திய வானெலி நேற்று முதல் செவ்வாய்க்கிழமை வரை இரவு பகலாகத் தொடர்ந்து ஒலிபரப்புச் சேவையை நடத்தும். (இ)

## யானையின் பாசம்!

(மாஸ்கோ)

சோவியத் யூனியனிலுள்ள மிருகக் காட்சிச் சாலையில் யானைகளைப் பராமரிக்கும் ஊழியர் ஒருவர் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து அந்த ஊழியரால் பராமரிக்கப்படும் யானை ஒன்று உண்ணாவிரதம் இருந்தது.

பலத்த சத்தமாக பிளிறுவதன் மூலமும், அருகிலுள்ள பொருட்களை கோபத்துடன் தூக்கி வீசுவதன்மூலமும் அந்த யானை தனது எதிர்ப்பைக் காட்டிவருகிறது. பதவியிலிருந்து இளைப்பாறிய 80 வயதான ஊழியர் மீண்டும் சேர்க்கப்பட்ட பின்னர் அது அமைதியடைந்தது. (கு)

# பிரிட்டனில் கார் உற்பத்தி பாதிப்பு?

லண்டன், ஜன. 6

பிரிட்டனில் வேலைநிறுத்தம் செய்துவரும் தேசிய உருக்குத் தொழிற்சாலை ஊழியர்களின் வேலைநிறுத்தத்துக்கு ஐந்து வாரங்களில் தீர்வுகாணப்படாவிட்டால் பிரிட்டனின் கார் உற்பத்தி பாதிக்கப்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

சம்பள உயர்வுகோரி தொழிலாளர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் அரசுக்குமிடையே கருத்து வேறுபாடு நிலவுவதால் வேலைநிறுத்தம் முடிவடையும் சாத்தியக் கூறுகள் காணப்படவில்லையென்று கருதப்படுகிறது. (கு)

## கல்வி அபிவிருத்தி ஆலோசனை

(உடுப்பிட்டி)

யாழ். பிரதேசக் கல்வி அபிவிருத்திச் சபையின் ஆலோசனைக் கூட்டம் நாளை மறுதினம் 9-ம் திகதி யாழ். கல்வித்திணைக்கள மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

......

## கட்டிடத் திறப்புவிழா

(ஊர்காவற்றுறை)

கரம்பன் தெற்கு கிராமஅபிவிருத்திச்சங்ககட்டிடத்திறப்பு விழாவும் பொங்கல் விழாவும் இம்மாதம் 16ம் திகதி சங்கத் தலைவர் திரு.பி.எஸ்.அல்பிரட் தலைமையில் நடைபெறவுள்ளது.

கரம்பன் தெற்கு கிராம மக்களின் உதவியால் கட்டப்பட்ட இக்கட்டிடத்தைஊர்காவற்றுறை எம். பி, பண்டிதர் கா, பொ. இரத்தினம்திறந்துவைப்பார். (கு)

......

## வட்டு. தொகுதி விவசாய ஊக்குவிப்பு நிதி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதியில் விவசாயம் சம்பந்தமான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்குமுகமாக 10 ஆயிரம் ரூபாவை அண்மையில் அரசாங்கம் வழங்கியுள்ளது,

பண்ணைகம் இளம் விவசாயிகள் கழகத்திற்கு விவசாய உபகரணங்களைக் கொள்முதல் செய்யும்பொருட்டு இப்பணத்தில் 7 ஆயிரம் ரூபா வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு, தா. திருநாவுக்கரசுவின் சிபார்சின்பேரில் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பிலுள்ள வாழ்வொளி நிலையத்திற்கு மிகுதி 3 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணத்தின் மூலம் இந்நிலையத்தில் விவசாயத்திற்குப் பயன்படுத்த நீர் இறைக்கும் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ரஷ்யா, ஆப்கான் படைகள் கடும்சண்டை

## கிளர்ச்சிக்காரருக்கு இராணுவம் ஆதரவு

காபூல், ஜன, 6

**ஆப்கானிஸ்தானிலுள்ள சோவியத்யூனியனின் துருப்புக்களுக்கு எதிராக போராடிவரும் கிளர்ச்சிப்படைகள் தொடர்ந்து கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளன.**

சோவியத்யூனியனின் தலையீட்டுக்கு எதிராக இயங்கிவரும் இக் கிளர்ச்சிப்படைகளுக்கு ஆப்கானிஸ்தானின் இராணுவப்படைவீரர்கள் சிலரும் ஆதரவு வழங்கி[illegible] கிளர்ச்சிப்படை வட்டா[illegible] தெரிவித்தன.

இதே வேளையில் காபூலைக் கைப்பற்றியுள்ள சோவியத் யூனியன் துருப்புக்கள்தொடர்ந்து மிக வேகமாக முன்னேறிவருகிறது. தொடர்ந்து உள்நோக்கி நாட்டுக்குள் புகுந்து வரும் ரஷ்யப் படைகளுடன் ஆப்கான் கிளர்ச்சிப் படைகள் கடுமையான சண்டையில் ஈடுபட்டுள்ளன. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**REGAL** (Jaffna)
Daily at 2-30, 4-30, 7-00 & 9-30 P. m.

Your last chance to re-live the greatest moments of movie musical magic...

Fred Astaire · Gene Kelly · Erank Sinatra · Bing Crosby · Clark Gable · Spencer Tracp · Katherine Hepburn · Judy Garland
The Marx Brothers Laural & others...

**That's Entertainment Part-2**

100வது வெற்றித் திருநாளை நோக்கி ஓடுகிறுள்!
**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, சுஜாதா, சந்திரமோகன், கவிதா
நடித்த
**அந்தமான் காதலி**
(வர்ணப்படம்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி: 10.30.பி.ப. 2.30,6.00, 9.30
சிவாஜி, ஜெயலலிதா
ஜி.வரலட்சுமி
நடித்த
(புத்தம்புதிய பிரதி)
**தாய்**

100-வது வெற்றித்திருநாளைநோக்கி
**சாந்தி** (யாழ்நகர்) தினசரி 10-30,2-30 6-30,9-45
போன்: 7642
ஜெய்சங்கர் ஸ்ரீதேவி எம்.ஆர்.ராதா
அசோகன் ஸ்ரீகாந்த் மனோரமா சுருளி
நடித்த
**டாக்ஸி டிரைவர்**
வண்ணத்திரையோவியம்

A Hilarious Action Comedy Film For All Ages
**RANEE** (JAFFNA) Daily at: 10-30, 2-15 4-45,7-15&9-45p.m.
Terrence Hill Bud Spencer
Team up As A Pair Of Miami Beach
Combers Donning The Police
Unigorm Go About Busting
Cars And Crooks In Warner Brothers Presentation

**CRIME BUSTERS**

100-வதுவெற்றித்திருநாளைநோக்கி
**ஸ்ரீதர்** (யாழ் நகர்)
தினசரி காலை 10-30, பி, ப. 2-30, 6-15, 9-45
சிவாஜிகணேசன்-சுஜாதா
நடித்த
**தீபம்**
(வெள்ளிவிழாச் சித்திரம்)
(வர்ணக்கலர்)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜய., மனோரமா, தேங்காய் சீனிவாசன்
நடிக்கும்
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்)
குடும்பத்துடன் பார்க்கவேண்டிய படம்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஜெய்சங்கர் ஜெயசுதா நடித்த **பந்தாட்டம்**

**லிடோ** (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-30
போன்: 7693
**வெள்ளிக்கிழமை விரதம்**

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 23-ம் திகதி
திங்கட்கிழமை
7-1-1980

மேடம்: மாணவர்களாயின் கல்வியில் கணிசமான முன்னேற்றமுண்டு. வெளியிடத் தொடர்புகளில் நல்லமாறுதல்கள் தென்படும். புண்ணிய விருப்பும் மேலிடும்.

இடபம்: குடும்பத்தில் சுப கருமங்கள் இடம் பெறுவதற்கிடமுண்டு, பெரியோர் ஒருவரின் ஆதரவுக்கிடமுண்டு. உஷாரான தினம்.

மிதுனம்: காதல்கனை தாக்கும். முயற்சி செய்யின் முன்னேற்றத்திற்குத் தாராளமாக இடமுண்டு. சகோதரசுகமும் உண்டு,

கடகம்: நிதியில் முடக்கமேற்படும் பயிர்ச்செய்கையில் பாதிப்பு விளையக்கூடும். மனந் தளராதிருக்கவும்.

சிங்கம்: நிச்சயமற்ற நிலையால் வேதனைப்படுவீர்கள். பொருள் வரவில் தடையுமேற்படலாம். தெய்வநம்பிக்கை பலன் தரும்.

கன்னி: வாழ்க்கையே கலகலப்பாக இருக்கும் இனிக்கப் பேசுவதன்மூலம் வேண்டியவர்களைச் சொக்கவைப்பீர்கள். சுபதினம்.

துலாம்: முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை தோன்றலாம். வாகனச் சாரதிகள் நிதானத்துடன் இருக்கவும், இறைவழிபாடு நன்று.

விருச்சிகம்: பொருளாதாரத் துறையில் விருத்தி ஏற்படும். புதிய முதலீடுகளுக்கு ஏற்ற தினம். மாதுருவழி பெருமையும் உண்டு.

தனுசு: பூமியால் லாபமுண்டு. பொதுசனத்தலைமைக்கான வாய்ப்பும் சிலருக்கு கிடைக்கலாம். சுமாரான தினம்.

மகரம்: அரச கவலைக்கிடமுண்டு. எதிரிகள் எக்காளமிடுவர். பிரயாணத்தைப் பின் போடவும்.

கும்பம்: ஒளிமயமான எதிர்காலத்திற்கு வித்திடப்படும். கலைஞர்களுக்கு கனிவான தினம். தொழில் மகிழ்ச்சியுமுண்டு.

மீனம்: உடல் நலனும்பாதிக்கப்படக்கூடும். கொடுக்கல் வாங்கல் விடயத்தில் அதிக கவனம்செலுத்தவும். வாழ்க்கையும் சுமையாகத் தோன்றும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

......

# மகளிர் கல்லூரிக்கு மின்இணைப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு மின்சார விநியோகப் செய்வதற்கா பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 30 ஆயிரம் ரூபாவை வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு ஒதுக்கீடு செய்துள்ளார்.

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - விஜயலக்ஷ்மி
**வல்லவன் ஒருவன்**

**நாகம்ஸ்** (சுன்னுகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி-வாணிஸ்ரீ
**குலமா குணமா**

# "எமது பாவங்களுக்கு சிலுவையில் தம்மை ஒப்புக்கொடுத்தார்"

(அரியாலை)

"இறைவன் எம்மீது செலுத்தும் ஈடற்ற அன்பை நாம் மற்றவர்கள்மீதும் செலுத்த வேண்டும். இறைவன் எம்மீது செலுத்திய அன்பினுல் எமது பாவங்களை நீக்க தம்மையே சிலுவை மரத்துக்கு ஒப்புக் கொடுத்தார். இந்த அன்பு ஈடிணையற்றதாகும்."

இவ்வாறு நல்லூர் பரி. யாக்கோப்புஆலயத்தில் நடைபெற்ற ஆராதனையில் தென்னிலங்கையைச் சேர்ந்த அருட்திரு. லக்ஷ்மன் பீரிஸ் அடிகளார் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து அருளுரை நிகழ்த்துகையில் இறைவனின் அன்பு அளவற்றது. அந்த அன்பு கணவனையும் - மனைவியையும் இணைக்கிறதுடன், ஒருவர்மேல் ஒருவர் அன்புகூரச் செய்கிறது. பிறர்மேல் நாம் அன்பு செலுத்த எம்மைப் பணிக்கிறது. பெற்றோர் மேலும், பிள்ளைகள் மேலும் அன்பு செலுத்த எமக்கு வழிவகுக்கிறது. அத்துடன் ஒருவர்மேல் ஒருவர் இன-மொழி-நிற பேதமில்லாமல் அன்புகூரச் செய்கிறது. இறைவன் தமது வாழ்க்கையின் மூலம் எமக்குக் காட்டி வைத்த அன்பை நாம் கைக்கொண்டால் நம் நாட்டில் இன-மொழி-நிற பேதங்கள் ஏற்படமுடியாது. நாம் எம்மை நேசிப்பதுபோல் பிறரையும் நேசிக்க இறைவன் எம்மைப் பணிக்கின்றுர். இதனையே எமது வேதாகமம் எமக்குக் கூறுகிறது" என்று குறிப்பிட்டார்.

## தேசிய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### தேசிய வருமானம் நடைமுறை விலைகளிலும் நிலையான விலைகளிலும் கணிக்கப்படல்:

நாட்டு உற்பத்தியின் பணரீதியான பெறுமதி நாட்டின் மொத்தப் பொருளாக்கம் எனப்படும். இக்கணிப்பீட்டின் ஒரு முக்கிய நோக்கம் ஆண்டுக்காண்டு ஒப்பிடுதல் ஆகும். நடைமுறை விலைகள் விலை மாற்றங்களால் பாதிக்கப்படுவதல் தேசிய வருமானம் நிலையான விலைகளிலும் கணிக்கப்படுகிறது. நாட்டின் மொத்த உற்பத்தியை நடைமுறை ஆண்டின் விலைமட்டத்தால் பெருக்கிப் பெறப்படுவது நடைமுறை விலைத்தேசிய வருமானம் எனப்படும். நிலையான ஒரு ஆண்டின் விலையின் அடிப்படையில் கணிக்கப்படுவது நிலையான விலைத் தேசிய வருமானம் அல்லது மாரு விலைத் தேசிய வருமானம் எனப்படும். நிலையாகக் கொள்ளும் ஆண்டு அடியாண்டு (Base year) எனப்படும், இலங்கையில் 1959-ம் ஆண்டு அடி ஆண்டாகக் கொள்ளப்படுகிறது.

### தலா வருமானம் (Per Capita Income)

தேசிய வருமானக் கணிப்பீட்டின் முக்கிய நோக்கங்களில் ஒன்று நாடுகளுடன் ஒப்பிடல் ஆகும். நாடுகள் பரப்பளவு, சனத்தொகை என்பவற்றில் வேறுபட்டுக் காணப்படுவதால் ஒப்பிடுவது சிரமமானது. எனவே தான் மொத்த தேசியவருமானத்தை மொத்தச் சனத்தொகையால் பிரித்து தலாவருமானம் என்பது அளவிடப்படுகிறது. இது அல்லித வருமானம், தனிநபர் வருமானம் எனவும் அழைக்கப்படும்.

## கிறிஸ்மஸ் ஆராதனை:

# வயோதிபர்களுக்கு சிற்றுண்டி

[அரியாலை]

நல்லூர் பரி யாக்கோப்பு ஆலய மாதர் சங்கக்குழுவினர் சபைக்குரு யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு சாம். டி. ஹோர்சிங்டன் அடிகள் தலைமையில் கைதடி வயோதிபர் சாந்தி நிலையத்திற்கு விஜயம்செய்து அங்குள்ள வயோதிபர்களுக்கு சிற்றுண்டிகள் வழங்கி கிறிஸ்மஸ் விழாவைக்கொண்டாடினர்.

சாந்தி நிலயத்திலுள்ள கிறுஸ்தவ ஆலயத்தில் விசேட ஆராதனை நடாத்தப்பட்டது. இந்த வைபவத்தில் சுன்னுகம் கிறிஸ்தசேவா ஆச்சிரமபிரதம குரு அருட்திரு சாம் அல்பிரட் அடிகளும் கலந்துகொண்டார்.

......

# நியூஸி. வர்த்தக அதிகாரி வருகிறுர்

[கொழும்பு]

நியூசிலாந்தின் வர்த்தக ஆணையாளர் திரு. ஜே. போர்ன்ஸ், இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கைக்கும் நியூசிலாந்திற்குமிடையிலான நெருங்கிய வர்த்தகத்தொடர்புகள் பற்றி இங்கு ஆராயவுள்ள இவர் வர்த்தகர்களுடனும், இறக்குமதியாளர்களுடனும், அமைச்சுக்களினதும், அரசாங்க கூட்டுத்தாபனங்களினதும் உயரதிகாரிகளுடனும் இது சம்பந்தமாகக் கலந்துரையாடுவார்.

(வெ)

......

# இடமாற்றம்

(அரியாலை)

கொழும்பு கல்வித் திணைக்களத்தில் பரீட்சைப்பகுதியில் எழுதுவினைஞராகப் பணியாற்றிய திரு. டா. தேவமதுரம் யாழ்ப்பாணம் கல்விக் காரியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

பருத்தித்துறைச் சிறைச்சாலையில் பாதுகாப்பு ஊழியர்களாகப் பணியாற்றிய திருவாளர்கள்: எஸ். கனகநாயகம், ஆர். விஷ்ணுசிங்கம் ஆகியோர் மன்னுருக்கும், திரு. வி. வேலுப்பிள்ளை மட்டக்களப்புக்கும், திருமதி பி. மதியாபரணம், செல்வி ஈஸ்வரி அப்பாத்துரை ஆகியோர் கிளிநொச்சிக்கும் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

......

# கனடிய பிரசங்கியார் யாழ்.வருகிறுர்

(அரியாலை)

இலங்கை வேதாகமசங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு விஷயம் செய்திருக்கும் கனடாவைச் சேர்ந்த சிறந்த கிறீஸ்தவ பிரசங்கியான அருட்திரு மானிபற்றசன் அடிகளார் இம்மாதம் 20-ந் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருக்கிறுர்கள்.

வட்டுக்கோட்டை கதிட்டல் ஆலயம் யாழ்ப்பாணம் பரிசுத்த பேதுறு ஆலயம் கண்டிக்குளி பரி யோவான் ஆலயம் ஆகியவற்றில் 20ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும் ஆராதனைகளில் அருளுரை நிகழ்த்துவர்கள்.

அன்று மாலை யாழ்ப்பாணம் றிம்பர் மண்டபத்தில் நடைபெறும் விசேட ஆராதனையில் அவரும் அவரது குழுவினரும் கலந்து கொண்டு கிறிஸ்தவ பாடல்களை பாடுவதுடன் அருளுரையும் நிகழ்த்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும்
சிறந்த முறையில்
திருத்திக்கொள்ள...


டில்கா வாச்வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல்மாடி.

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

## முதல் முடிவு இது

(புதுடில்லி)

இந்திய இடைக்காலத் தேர்தல் முதல் முடிவு காபந்து பிரதமர் சரண்சிங்கிற்கு ஆதரவாகவே வெளிவந்தது. ஆனால் வெற்றியீட்டிய இவர் சரண்சிங்கின் மக்கள் கட்சி அபேட்சகர் அல்ல! அர்ஸ் காங்கிரஸ் வேட்பாளரும், சரண்சிங் அமைச்சரவையின் உருக்கு சுரங்க வள பிரதி அமைச்சருமானஜனுப் பி. எம். சஹீட் லட்சதீவுதொகுதியிருந்து புதிய பாராளுமன்றத்தின் முதலாவது உறுப்பினராக நேற்று தெரிவு செய்யப்பட்டார்.

WOLF MORTISE STAND

வூல்ப்
மின்சார
உபகரணங்களுக்கு
விஜயம் செய்யுங்கள்
வடமாகாணத்தக விநியோகஸ்தர்:
நியூநோன் எலெக்றிக்கல்ஸ்
141-143. ஸ்நான்லி வீதி.
யாழ்ப்பாணம். போன் 7016.

# டில்லி இந்திரா கைவசம்!

(புதுடில்லி)

**1977ம் ஆண்டில் திருமதி இந்திராகாந்தி 'பறிகொடுத்த' டில்லி; நேற்று எண்ணப்பட்ட வாக்குகளின்படி, அவரது கைக்கே மீளப்பெறறது!**

டில்லியின் மொத்த தொகுதிகள் ஏழு ஆகும். இந்த ஏழு தொகுதிகளிலும் ஆறு தொகுதிகளில் திருமதி இந்திரா காந்தி கணிசமாக முன்னணியில் திகழ்வதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

● 1977ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில், திருமதி இந்திராகாந்தி இங்கு சகல தொகுதிகளையும் இழந்திருந்தது 'குறிப்பிடத்தக்கது.

## இந்திராவின் ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

க., இந்திராகாங்கிரஸ், முஸ்லிம் லீக் கூட்டணி பதினெட்டுத் தொகுகளில் பெரும்பான்மை பலத்துடன் முன்னணி வகிப்பதாக இன்று அதிகாலை கிடைக்கப்பெற்ற கடைசி தேர்தல் முடிவுகள் தெரிவித்தன!

மத்திய அமைச்சராக விருந்து கடைசிக் கட்டத்தில் ராஜினமா செய்துகொண்ட அ. இ. அ. மு, க. அபேட்சகர் திரு. பாலா பழனூர், கடலூர்த்தொகுதியில் இந்திரா காங்கிரஸ் அபேட்சகர் திரு. முத்துக்குமரனை விட 26,000 வாக்குகளால் பின் நிற்பதாகவும் அதேமாதிரி இந்திராகாங்கிரஸ் சிங்காரவடிவேலு தஞ்சையில் அ. இ. அ. தி. மு. க. தங்கமுத்துவை விட 19,000 கூடுதல் வாக்குகள் பெற்றிருப்பதாகவும், நேரடித் தொகுதியான நாகபட்டினத்தில், தி, மு. க. தாழை கருணாநிதி கம்யூனிஸ்ட் முருகையனை விட 12,000 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றதென தேர்தல் அறிக்கைகள் தெரிவித்தன.

## வல்லிபுரத்தில்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வின் தேவையைப் பூர்த்தி செய்து வருவதால் இந்நிலையத்துக்கு நிதி உதவி வழங்கி உதவ வேண்டும்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் எக்ஸ் கதிர் இயந்திரம் அமைக்கப்பட்டு அதை இயக்குவதற்கு வைத்திய நிபுணர் ஒருவரையும் நியமிக்க வேண்டும் இதன் மூலம் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் உள்ள நெருக்கடியைக் குறைக்க முடியும்.

தன்னலமற்ற சேவைசெய்து வரும் டாக்டர் சி. கதிரவேற்பிள்ளையின் இடமாற்றத்தை ரத்துச் செய்யவேண்டும். இருதய நோயாளர்களுக்கான ஜீ. சீ. ஈ. இயந்திரம் ஒன்றும் இவ் வைத்தியசாலைக்கு வழங்க வேண்டும். (அ)

## தேர்தல் சிதறல்கள்

(துடில்லி)

இந்தியாவின் ஏழாவது பாராளுமன்றத்துக்கான இடைக்காலத் தேர்தலின் இரண்டாவது இறுதிக்கட்ட வாக்களிப்பு நேற்று நடைபெற்று முடிவடைந்த அதே நேரத்தில், கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற முதல் கட்டத் தேர்தலின் வாக்குகள் எண்ணும்வேலை நேற்றுக்காலை ஆரம்பமானது.

நேற்று நடைபெற்ற தேர்தலின் வாக்குகள் இன்று காலை எண்ணப்படும்.

நாட்டின் நாலா பகுதிகளிலிருந்தும் தலைநகருக்குக் கிடைக்கும் தேர்தல் செய்திகளின்படி நேற்று குறைந்த அளவு வாக்களிப்பே நடைபெற்றதாகத் தெரியவருகிறது. மந்தநிலையான வாக்களிப்புக்கு பாதகமான கால நிலையும் ஒரு காரணம்.

● தமிழ்நாட்டில் நேற்று 20 தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது. வாக்களிப்பு மிகவும் சுறுசுறுப்பாகவும், அமைதியாகவும் இருந்ததாக தேர்தல் கமிஷனர் தெரிவித்தார்.

● தமிழகத் தலைநகரில் சில தொகுதிகளில், வாக்குச் சாவடிகள் திறக்கப்படுவதற்கு முன்னதாகவே நீண்ட 'கியூ' வரிசை காணப்பட்டது.

● இத் தொகுதிகளில் ஆண்களைவிட பெண்களே அதிகமாகக் காணப்பட்டனர். அவர்களது கைகளில் குழந்தைகள் காணப்பட்டன.

● தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி, நேற்று வாக்களிக்கவில்லை. அவர் நடுநிலைவகித்ததாக அறிவிக்கப்பட்டது.

● விருதுநகர் தொகுதியில் நேற்று மூண்ட கைகலப்பில் ஒருவர் அரிவாள் வெட்டுக்குப் பலியானர்.

● பஞ்சாப் மாநிலத்தில் இரண்டு தொகுதிகளில் வாக்குகள் எண்ணப்படுவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தேர்தல் மோசடி சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்ட புகார் மீதான விசாரணை முடிவடைந்தபின்னரே இவ்விரு தொகுதிகளிலும் வாக்குகள் எண்ணப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

● முன்னாள் ஜனதிபதி திரு. வி. வி. கிரி நேற்று முதல்தடவையாக வாக்களித்தார். முன்னர் அவர் பல அரசு பெரு உத்தியோகங்களை வகித்த காரணத்தினால் பல வருடங்கள் வாக்களிக்கமுடியவில்லை,

## சட்ட சபை விபரம்: 24 முடிவுகள்

(புதுச்சேரி)

மத்திய அரசின் கீழ் தனித்து இயங்கும் யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரி (புதுச்சேரி) தேர்தல்நிலைமை (இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை) வருமாறு:

பாண்டிச்சேரி சட்டசபையின் மொத்த தொகுதிகள் முப்பது. லோகசபை தொகுதி ஒன்று. சட்டசபைத் தேர்தலில் மொத்தம் 132 பேரும் லோகசபைத் தேர்தலில் மூவரும் போட்டியிட்டனர்.

| கட்சி | தொகுதி | வெற்றி |
|---|---|---|
| அ. தி. மு. க. | 18 | |
| தி. மு. க. | 15 | 11 |
| இ. காங்கிரஸ் | 13 | 08 |
| ஜனதா | 09 | |
| வலது கம்யூ. | 07 | |
| இடது கம்யூ. | 02 | |
| முஸ்லிம் லீக் | 02 | 01 |
| மக்கள் கட்சி | 03 | |
| அர்ஸ். காங்கிரஸ் | 10 | |
| சுயேச்சை | 53 | 04 |
| மொத்தம் | 132 வேட்பாளர் | |

### லோகசபைத் தொகுதி

| | |
|---|---|
| பி. சண்முகம் | (இ. காங்) |
| லட்சுமி நாராயணரெட்டி | (ஜனதா) |
| பி. தேவராஜ் | (மக்கள் கட்சி) |

## இலங்கைப் பல்கலைக்கழகங்களின்/வெளிநிலைப் பட்டப்படிப்புகள் 1980
(இரண்டாவது விடுதி அனுமதி)

வெளிநிலைப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகளை 1980-ம் கல்வி ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர்வதற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

### கல்வித் தகமைகள்

(அ) க. பொ. த, (உயர்) பரீட்சையில் (இருஅமர்வுகள் உட்பட) நான்கு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது
(ஆ) விஞ்ஞான பிரிவுக்கு 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது
(இ) கலை, வர்த்தக பீடங்களுக்கு 21 வயதிற்கு மேற்பட்டவர்களாயின் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது
(ஈ) ஆசிரிய பயிற்சி சான்றிதழ் அல்லது தொழில் நுட்பக்கல்லூரி 'டிப்ளோமா' சான்றிதழ்

### பாடநெறிகள்

01. பௌதிக விஞ்ஞானம்
02. உயிரியல் விஞ்ஞானம்
03. புள்ளிவிபரவியல்
04. கலை முதல்தேர்வு
05. வணிக முதல் தேர்வு
06. சட்ட முதல் தேர்வு

### விண்ணப்பங்களை அனுப்பும் முறை

விண்ணப்பப்படிவங்களை பெறுவதற்கு தபால் தலை ஒட்டப்பட்டதும், சுயவிலாசமிடப்பட்டதும் 9''×4'' அஞ்சலுறை அனுப்பி 30-01-80க்கு முன்னர் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்ப்பவர்களும் விண்ணப்பங்களை அனுப்பலாம்.

விரிவுரைகள் யாழ்நகரில் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிறுவனம்,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா
ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல

மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக் உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்குசெய்துகொள்ள
இன்றே தொடர்புகொள்ளுங்கள்.

மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால்பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No GE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org